
உழவு
Haran


Happy Pongal
உளங்கனிந்த
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
IDEAL
DEVELOPMENTS
www.idealdevelopments.com

மார்க்கம் தைப் பொங்கல் விழா மலர்

உழவு 2017

PROCLAMATION

The Mayor and Members of Council
For
The Town of Markham

hereby

Proclaim

January 13, 14 and 15, 2012

Tamil Heritage Days/Thai Pongal (Tamil New Year)

Frank Scarpitti
Mayor

MARKHAM



வடமாகாண முதலமைச்சர்

கௌரவ சி. வி. விக்கினேஸ்வரன் ஐயா அவர்களை

வருக வருக என வரவேற்கின்றோம்!

Frank Scarpitti
Mayor

January 15, 2017

MESSAGE FROM MAYOR SCARPITTI

On behalf of Members of Council and the City of Markham, I am pleased to extend our best wishes to all those attending the 6th Annual Thai Pongal Vizha / Markham Tamil Heritage Celebrations hosted by the Centre for Tamil Heritage and Culture.

The city of Markham is proud to be recognized as Canada's most diverse community. Cultural diversity is one of our greatest assets and we welcome people from all over the world that has made their home in our city. We are greatly enriched by many cultures and traditions that they bring with them. We appreciate the contributions that Tamil Canadians continue to make to the cultural and economic vibrancy in our community and to The Centre for Tamil Heritage and Culture for promoting awareness of their culture and history.

This annual harvest festival is a special time to give thanks to nature and to celebrate peace, prosperity, happiness and harmony. The harvest is considered to be the most important festivals celebrated by the Tamil people.

I want to extend my best wishes to everyone for a wonderful celebration and to all the volunteers who have dedicated their time and effort in making this event possible.

Sincerely,

Frank Scarpitti

Frank Scarpitti
Mayor



The Corporation of the City of Markham, Anthony Roman Centre, 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.475.4872 Fax: 905.479.7775 · fscarpitti@markham.ca www.markham.ca

Centre for Tamil Heritage and Culture
தமிழ் மரபியல் பண்பாட்டு மையம்



January 14-15, 2017

Logan Kanapathi
Councillor, Markham

GREETINGS FROM THE CHAIR

On behalf of the Markham Thai Pongal Vizha Committee and the Centre for Tamil Heritage and Culture, I am delighted to welcome you to the 6th Annual Markham Thai Pongal Vizha.

Thai Pongal has been celebrated for over 2,200 years by Tamils worldwide including India, Sri Lanka and the Tamil Diaspora worldwide. Pongal is a non-religious festival celebrated over four days to honour and as an expression of gratitude to Nature including agricultural livestock and the farmers for supporting livelihood. Thus, Pongal is Thanksgiving time for Tamils, it is currently celebrated by over 74 million Tamils worldwide and over 350,000 Tamils in Canada predominantly in the Greater Toronto Area. It is also celebrated as the Tamil New Year.

This year's celebrations are unique with historic Friendship Agreement, MoU signing ceremony between City of Markham and Mullaitivu, Northern Province, Sri Lanka with Hon. C.V. Wigneswaran, Chief Minister of Northern Province and Markham Mayor Frank Scarpitti and the launch of Kanaiyazhi literature magazine by Dr. M. Rajendran Former Vice-Chancellor, Tamil university, Publisher & Editor at the Markham Civic Centre on January 14, 2017. The second day, January 15th will feature, "Award Ceremony" recognizing Silambam Aasaan Thiru. Pathmakumar, "Pongal O Pongal" cultural extravaganza at the Flato Markham Theatre. I would like to thank each and every member of the committee, community organizations, our sponsors, volunteers, media and performers who have played a significant role in organizing this prestigious celebration to this magnitude.

The City of Markham is home to the most ethnically diverse communities in all of Canada. Markham was the first City in North America to officially proclaim Tamil Heritage Days, I am very proud of the various events happening throughout month of January as a part of Tamil Heritage Month Celebrations.

7475 McCowan Rd, Markham, Ontario
Tel: 905.479.7748 · e-mail: Markham.thaipongal@gmail.com · www.thiruvizha.ca

Centre for Tamil Heritage and Culture
தமிழ் மரபியல் பண்பாட்டு மையம்

புதிய உலகம், புதிய பூமி, நாங்கள் புதிய விடையத்தை கனடாவில் படைத்துக் கொண்டிருக்கிறோம்! புலம் பெயர்ந்த நாட்டில் நாங்கள் நெஞ்சில் நிறுத்தவேண்டியது, எங்கள் மரபு, பண்பாடுகள், கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் தான். அந்த வகையில் தமிழ் மரபுத் திங்கள் கொண்ட்டாமானது எமது அடையாளாங்களை கனடாவிலே பெருமையுடன் நிலை நிறுத்தவும் எமது அடுத்த சந்ததியினர் பயன்பெறுமாறும் அமைகின்றது.

ஆயிரம் வருடங்களுக்கு எங்களுடைய எதிர்கால சந்ததியினர் மனதில் ஈழத்தாய் மண்ணின் வரலாறுகளையும், அடையாளங்களையும் பதியவைக்கின்ற வகையில் பல வீதிகளுக்கும், பூங்காக்களுக்கும் தமிழ்ப் பெயர்களை நாம் சூட்டியிருப்பதை நீங்கள் நன்கு அறிவீரகள். அதில் முக்கியமானது வன்னி வீதியாகும், மற்றும் ற்ரிங்கோ (Trinco), ஈழம், டெல்ஃப்ட் (நெடுந்தீவு/ Delft), சென்னை, பற்றிகலோ (Batticaloa), ஜஃப்னா (Jaffna), யாழ் சீடாவூட் பார்க் (Yarl Cedarwood Park), முல்லை, மல்லாவி, மன்னார், யோகபுரம் என்பனவும் எமது வரலாற்றின் தடையங்கள் ஆகும். அத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மார்க்கம்-முல்லைத்தீவு நட்புறவு உடன்படிக்கை புதிய உறவுப்பாலத்தை புலம்பெயர் தமிழருக்கும், தாயகத்தமிழருக்கும் உருவாக்கவல்லது என்பதில் ஐயம் இல்லை,

What I admire most about Canadians of Tamil origin is not just fact that we have achieved success as individuals in various fields but also that the Markham Thai Pongal event is another example of not forgetting where we came from and what we continue to carry with us. Thank you. வணக்கம்.

Best wishes,

Logan Kanapathi

Markham Thai Pongal Committee - Chair
City of Markham - Councillor

7475 McCowan Rd, Markham, Ontario
Tel: 905.479.7748 · e-mail: Markham.thaipongal@gmail.com · www.thiruvizha.ca

உலவு

உள்ளடக்கம்

மார்க்கம் பொங்கல்விழா நோக்கும் போக்கும்

2011இல் மார்க்கம் மாநகரசபை தமிழர் மரபுரிமையை அங்கீகரித்ததன் பின், தொடர்ச்சியாக இந்தப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. மார்க்கம் வாழ் தமிழர்களும் திரு லோகன் கணபதியும் இணைந்து இவ்விழாவை முன்னெடுக்கத் தொடங்கினர். இந்த விழா வெறும் சம்பிரதாய நிகழ்வாக இல்லாமல், உயர்ந்த பெறுமானங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஏற்பாட்டாளர் முனைப்புக் கொண்டிருந்தனர்.

புலம்பெயர்ந்தோருடைய வாழ்க்கைச் சூழல் சவால்கள் நிறைந்தது. தனித்துவ இனமொன்றின் பண்புகளையும் அடையாளங்களையும் எளிதில் அழித்துச் செல்லும் வல்லமை கொண்டது. குறிப்பாக, வளர்ந்து வருகின்ற இளைய தலைமுறை கனடியத் தேசியப் பண்பாட்டுச் சூழலுக்குப் பொருந்திச் செல்லும் அதேவேளை, தம்மின அடையாளங்களை எளிதில் இழக்கத் துணிவர். இவ்வாறான சூழ்நிலைகளை மனதிற் கொண்டு, பண்பாட்டு அடையாளங்களைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வை எம் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்தப் பொங்கல் விழாவின் முதன்மை நோக்கமாக அமைந்தது.

மொழி, பண்பாடு, கலை என்ற இந்த மூன்று வடிவங்களூடாகவுமே நாம் எமது தமிழர் என்ற தனித்துவத்தை வெளிப்படுத்த முடியும். அதற்கான வாய்ப்புகளை இந்தப் பொங்கல் விழா ஏற்படுத்திக் கொடுத்தது.

தொடக்கத்தில் முதல் மூன்று ஆண்டுகளும் ஒருநாள் நிகழ்வாக நடைபெற்ற இந்த விழா, கிடைத்த வரவேற்புக் காரணமாக 2016 முதல் இருநாள் நிகழ்வுகளாக நடைபெறத் தொடங்கியது. முதல்நாளில், மொழி சார் நிகழ்வுகளுக்கு முதன்மை வழங்கப்பட்டும் மறுநாள் நிகழ்வு பண்பாட்டை வெளிப்படுத்தும் கலைநிகழ்வுகளுக்குச் சிறப்பிடம் வழங்கியும் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

மொழிக்கல்வி தொடர்பான கருத்தரங்குகள், தொன்மைத் தமிழர் வரலாறு, வாழ்வியல் காட்சிகள், கலைகள் தொடர்பான கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பன முதல்நாள் நிகழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பெரிதும் அரங்க நிகழ்வுகளை கொண்ட இரண்டாம் நாள் நிகழ்வுகள், முறையாகத் தேர்வு செய்யப்பட்ட மரபு சார்ந்த, பண்பாட்டு வெளிப்பாடுகளைக் கொண்ட கலை நிகழ்வுகளை மையப்படுத்தியதாக அமைக்கப்படுகின்றன. விருந்தினர்கள், கலைஞர்கள் மதிப்பளிக்கப்படுகின்ற நாளாகவும் இது சிறப்புறும்.

இவ்வாறாக ஆண்டுதோறும் வளர்ந்து வருகின்ற இந்தப் பொங்கல் விழாவின் பின்னணியில் பங்காற்றுவது 'தமிழர் பண்பாட்டு மரபுரிமை மையம்' என்ற அமைப்பாகும். இந்த அமைப்பே பல வளங்களை வழங்கி இந்த நிகழ்ச்சிகள் சிறப்புற உதவுகின்றது.

இந்தப் பொங்கல் விழா, இப்போது விரிந்து பரந்த பெருவிழாவாகவே நடைபெறுகின்றது. மார்க்கம் என்ற வட்டத்தை விட்டு விரிந்து அனைத்துத் தமிழருக்குமானதொரு பொங்கல் விழாவாக இது உருக்கொண்டுள்ளது.

இந்த விழா ஆண்டுதோறும் சமூகப்பயன் தரவல்லதாகவும் சிறப்பாகவும் நடைபெற அனைவரினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் எமக்குத் தேவை.

இனமாக இணைந்து செல்வோம். தனித்துவம் காப்போம்.



முதலமைச்சர் கௌரவ சி. வி. விக்கினேஸ்வரன் - வரவேற்கின்றது மார்க்கம் மாநகரசபை

நீதிபதி சி.வி விக்கினேஸ்வரன், ஓர் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியும் வடமாகாணசபையின் முதலாவது முதலமைச்சரும் ஆவார். செப்டெம்பர் 2013 இல் முதல்முதலாக வடமாகாணசபையில் நடைபெற்ற தேர்தலில் வடமாகாண முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தேர்தலுக்கு மூன்று மாதத்திற்கு முன் அரசியலில் நுழைந்தாலும், அவர் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளரரை விடவும் ஐம்பது வீத வாக்குகளுக்கு மேலாக வடமாகாணத்தின் மிகப்பெரிய விருப்ப வாக்குகளைத் திரட்டிக்கொண்டவர்.

தமிழர் அரசியல் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்ப்பட்டார்.

நீதிபதி விக்கினேஸ்வரன் கொழும்பில் றோயல் கல்லூரியில் கல்வி பயின்றதோடு, ஆங்கிலத்திலும் தமிழிலும் அரங்குகளில் பேசும் திறமை கொண்டிருந்தார். பட்டிமன்ற விவாதங்கயில் கலந்து கொண்டிருக்கின்றார். பல பரிசுகளை வென்றிருக்கின்றார்.

அக்கல்லூரியின் பருவ இதழின் பதிப்பாசிரியராக இருந்து, மாணவப் பயிற்சிப் படைஞராகவும் மூத்த முழுநிறைவாளனாகவும் திகழ்ந்தார். பின்னர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் இணைந்து 1962 இல் சட்ட மாணவர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவி ஒரு தமிழரைக் கிட்டத்தட்ட 45 வருடங்களாகக் கண்டதில்லை. அவர் வழக்குரைஞராகவும் வக்கீலாகவும் தகுதிபெற்று லண்டன் இளங்கலைஞர் பட்டத்தையும் இலங்கை டுடுஃ பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

15 வருடகாலம் தனிப்பட்ட சட்டப்பீடத்தில் பயிற்சி செய்து, 1979 இல் மாவட்ட நீதியாளராகவும் நீதிபதியாகவும் சட்டத்துறையில் இணைந்துகொண்டார். சட்டத்துறைக்குள் இணைவதற்கு முன் 1971 இல் இலங்கைச் சட்டக் கல்லூரியில் முதலாவது தமிழ் மொழி விரிவுரையாளராக தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிவுரையாற்றியவர் இவரே. கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரியிலும் மல்லாகத்திலும் நீதிபதியாகப பணியாற்றினார்.

1987 இல் கொழும்பு மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட முன்னர், முதற்சான்று நீதிமன்றத்தில் சேவையாற்றினார். 1988 இல் உயர் நீதிமன்ற நீதிபதியாக வடக்கு, கிழக்கு, மத்திய வடக்கு, ஊவா மற்றும் மேற்கு மாகாணங்களில் கடமையேற்றார். சட்டவாளர் லியனாராச்சி அவர்கள், பொலிஸாரின் காவலில் இருந்தபோது கொல்லப்பட்ட வழக்கில், குற்றவாளியை இனங்கண்டு கொண்ட வழக்கு விசாரணை மன்றில் உறுப்பினராகவும் இருந்தார்.

PTA எனப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், பதிவுசெய்யப்பட்ட JVP உறுப்பினர் எனக் கூறப்படும் பலருடைய வழக்குகளைச் செவிமடுத்தார். தெற்கு இலங்கையில், இந்தக் கிளர்ச்சி இயக்ககத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து, காவற்துறை அதிகாரிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட குற்ற ஒப்புதல்களைத் திறனாய்வு செய்து, "உறுதிப்படுத்தும் சான்றுகள் இல்லாமல் குற்ற ஒப்புதல்களுக்கு ஏற்ப, எந்தக் குற்றம்சாட்டப்பட்டவருக்கும் PTA சட்டத்தின் கீழ் குற்றத்தீர்ப்பை வழங்க ஒப்புதல்கள் மட்டும் போதுமானதல்ல" என வலியுறுத்தினார்.

தெய்வேந்திரன் வழக்கில் (SC Appeal No 65/200, SCM 16.10.2002) இதே நிலைப்பாட்டை உயர் நீதிமன்றத்தில் தனது வேறுபட்ட கருத்துக்கு மீள்ஒலிவடிவு கொடுத்து, இது "உயர் நீதிமன்றத்தின் சட்டவியலில் ஒரு முக்கியமான கருத்து" என

விளக்கினார். 1987-1988 இல் சிலகாலம் இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் திறந்த பல்கலைக்கழகத்- திலும் சட்ட விரி- வுரை செய்யத் தொடங்கினார்.

1995 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நியமனம் பெற்றவர், 2001 இல் உயர் நீதிமன்றத்திற்கு உயர்த்தப்பட்டார். மும்மொழித் தேர்ச்சி பெற்றவராகையால், தமிழிலும் சிங்களத் திலும் ஆங்கிலத்திலும் உயர் நீதிமன்றச் சடங்குமுறை வரவேற்பில் பேசிய முதலாவது முற்போக்கான நீதிபதியா- வார். ஒரு அரசியல் எதிரியாளரின் பதவியேற்புப் பற்றிய செய்திகளை வெளியிட்ட ஊடகங்கங் களின் சில பகுதி- களை ஏற்றுக்கொள்ள மறுத்த அப்போதைய ஜனாதிபதி, இவை அரசியலமைப்பிற்கு முரணானவை என மறுத்தார். அந்த மறுப்பு தவறானது எனக் கூறி அதைப் பெரும்பான்- மைத் தீர்மானத்தால் நிறைவேற்றியவரும் இவரே.

பொதுசனத்துறை ஒப்பந்தங்களின் குத்தகையேற்பைக் காப்பாற்றும் விதிகளை மீறும் தனியார் நிறுவனங்கள் இழப்பீடு செய்யவேண்டும் என ஆணை விதித்த நீதிபதிக- ளில் ஒருவரும் இவரே. குடிசார் நடைமுறைகள், நிலம், வங்கியியல், வாடகையும் வெளியேற்றமும், அறிவார்ந்த சொத்து, மற்றும் சேதங்களும் தொழிலாளர் சட்டங்களும் பற்றிப் பல முக்கியமான தீர்ப்புகளை வழங்கியவரும் இவரே.

உச்ச நீதிமன்றத்திலிருந்து 2004 இல் இளைப்பாறிய- தோடு, நீதிபதி விக்கினேஸ்வரன் பண்பாடு, சமயம் மற்றும் இலக்கிய முயற்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார். இலங்கையில் கிட்டத்தட்ட ஒரு தசாப்த்ததிற்கு மேல் மேன்மையான தமிழ் இலக்கிய சமுதாயம் எனப்படும் கம்பன் கழகத்தின் புரவலராக இருந்தார். இலங்கையின் 43 ஆவது உயர் நீதிபதியின் உச்ச சர்ச்சைக்குரிய அரசியல் குற்றச்சாட்டு உள்ளடங்கலாகப் பல சட்டவியல் விடயங்கள் சார்ந்து, நீதிமன்ற சட்டப்பீட உறுப்பினர்களுக்கும்பாரிய விரி- வுரைகளையும் பேச்சுக்களையும் நடாத்தினர். இந்துமதம் பற்றிய அவருடைய சொற்பொழிவுகளின் இரண்டு பதிவுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகங்களாக வெளியிடப்பட்டு உள்ளன.

முதலமைச்சரான பின், நீதிபதி விக்கினேஸ்வரன் துறை சார் தகைமையுடையவர்களை அமைச்சர்களாக நியமித்தார். அத்துடன் வடமாநிலத்து சமூகத்தால் தேர்தலில் கொடுக் கப்பட்ட பணிப்பாணையை மனதில் வைத்து ஒளிவின்மை யையும் பொறுப்புடைமையையும் ஓங்க வழிவகுத்தார்.

தெற்குடனும் அனைத்துலக சமூகத்துடனும் உறுதி யான நட்புறவை நாட வழிசெய்துள்ளார். நவம்பர் 2013 இல் இங்கிலாந்தின் பிரதம மந்திரி வடக்கு மாநிலத்திற்கு விஜயம் செய்து, சுதந்திரத்தின் பின்னர் வடமாநிலத்தின் முதலாவது அரசாங்கத் தலைவரான நீதிபதி விக்கினேஸ்வரனுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். மார்ச் 2015 இல் இந்தியப் பிரதமர் மோடியும் அதையே செய்தார். அந்தக் கூட்டத்தில் நீதிபதி விக்கினேஸ்வரன் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய அரசி யலமைப்பு மாற்றங்களைச் சுட்டிக்காட்டினார். நீதிபதி விக்கினேஸ்வரன், அமெரிக்காவின் செயலாளர், இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சர், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாட்டு உயர் அதிகாரி மற்றும் பல்வேறு தூதுவர்களுடனும் அரசாங்கம் சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டார்.

அவருக்கு வெளிநாட்டு உறவுகளுடனும் சர்வதேச நிறுவனங்களுடனும் வலிமையான உடன்பாட்டு நட்புறவை வைத்திருப்பதற்கான பலமுண்டு. நவம்பர் 2014 இல், இந்தியாவின் மதிப்புமிக்க குடிமுறைத் தன்னுரிமை மக்கள் ஒன்றியத்தால் சென்னையில் கனாபிரியன் நினைவு விரி- வுரையை ஆற்ற அழைக்கப்பட்டார். அவருடைய விரிவுரை குறித்துக் கருத்து வெளியிட்ட இதழாசிரியர் மு. வெங்கட்ரமணன் "காலாண்டுகளுக்கு மேலான தடை- காப்புப் பாதுகாப்பு மற்றும் இறைமை பற்றிய கருத்துகள் உணர்ச்சியூட்டுவதாகவும் நன்கு உரையாடப்பட்டதாகவும் இருந்தன. இந்திய மண்ணில் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் எந்தத் தலைவராலும் இந்த விடயங்கள் இவ்வாறு பேசப் பட்டதில்லை" எனக் கூறியுள்ளார்.

"ஐக்கிய இலங்கையில் மக்களின் மனஎழுச்சிகளைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டச் சீர்திருத்தத்தின் தேவை இப்போது உணரப்பட்டுள்ளது எனக் கூறி வருகின்றார். வடமாநிலத்தில் இராணுவத்தைக் குறைத்தல், யுத்தக் குற்றங் களுக்கான பொறுப்புக் கூறல், நீதியைப் பேணல், வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 70,000 விதவைகளின் உரிமை- களைப் பாதுகாத்தல், இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட சொந்தக்காரர்களுடைய நிலங்களைத் திருப்பிக் கொடுத்தல், கல்வியின் முக்கியத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுதல், வடக்கில் இருந்துவரும் போதைக் கெடுதிகளைப் போக்கு- தல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுவாழ்வை ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்ட ஏனைய சமூகங்களின் வாழ்க் கையை மீண்டும் புதுப்பித்தல் போன்றன பற்றிய தேவைகள் தொடர்பாக அவர் அழுத்தமாகவே கூறி வருகின்றார்.

பல்வேறு சிறப்புகளையும் உயர்வுகளையும் கொண்ட முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் மார்க்கம் மாநகர- சபையின் அழைப்பை ஏற்றுக் கனடா வந்துள்ளார்.

பொங்கல் விழா நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். அவரை அனைத்துத் தமிழ் மக்கள் சார்பிலும் பேரன்போடு வரவேற்கின்றோம்.

மார்க்கம் மாநகரசபை உறுப்பினர்

திரு. லோகன் கணபதி பதிவுகள்



2006ம் ஆண்டு மார்க்கம் மாநகரசபையின் 7ம் வட்டார உறுப்பினராகத் தெரிவானவர் திரு லோகன் கணபதி அவர்கள். தன்னுடைய கடின உழைப்பாலும் மக்கள் அவர் மீது கொண்டிருந்த அன்பாலும் தன் முதல் வெற்றியை உருவாக்கிக் கொண்ட லோகன் கணபதி அவர்கள் தொடர்ந்து மக்கள் பணியோடு தன்னை ஆழமாக இணைத் துக்கொண்டார். அடுத்த இரு தேர்தல்களிலும் அவர் பெற்ற வெற்றிகள் அதற்குச் சாட்சியாகும்.

பல்லின சமூகத்தவருடைய தேவைகளை அறிந்து அதற்கேற்ப உன்னதமான முறையில் பணியாற்றி அனைத்துச் சமூகத்தவரினதும் நன் மதிப்பைப் பெற்று வருகின்றமை இவரது பெருஞ் சிறப்பாகும்.

7ம் வட்டாரம் என்ற தன் எல்லைக்கும் அப் பால் மார்க்கம் தோர்ன்கில் பகுதியைச் சார்ந்த அனைத்து மக்களுக்கும் நன்கு அறிமுகமானவர் லோகன் கணபதி. பல்வேறு சமூக நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு அவர்களின் தேவைகளை நிறை வேற்றுவதில் பங்காற் றியிருக்கின்றார்.

சிறந்த மாநகர உறுப்பினராகத் திகழும் திரு. லோகன் கணபதி, யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் துறையில் பட்டம் பெற்றவராவார். கணக்கியலில் வல்லவராக இவரே மார்க்கம் மாந-கரசபையின் வரவுசெலவுத்திட்டமிடல் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். அதன் விளைவாக ரொரொன்ரோ பெரும்பாக மாநகர-சபைகளில் மக்களிடமிருந்து குறைந்த வருமான வரியைப் பெறுகின்ற மாநகரசபையாக மார்க்கம் திகழ்ந்து வருகின்றது.

மார்க்கம் மாநகரசபை உறுப்பினராகப் பணி யாற்றியபடி திரு. லோகன் கணபதி அவர்கள் பல்லினச் சமூகத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றிவருகின்ற பணிகள் தமிழ்ச் சமூகத்தின் ஆழமான இருப்புக்கு வலுவூட்டியுள்ளன.

7ம் வட்டாரத்துக்குட்பட்ட பகுதியில், பிரமாண்ட மான நவீன சமூக மையமொன்று 70 மில்லியன் டொலர் செலவில் நிறுவப்பட்டு வருகின்றது. இதற் காக முன்நின்று பாடுபட்டவர் திரு லோகன் கணபதி. பல்வேறு தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இப்பகுதி மக்களுக்கான உள்ளரங்க உதைபந்தாட்ட மைதானத்தை உருவாக்கியவர்.

தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் ஒன்றை நிறுவி, அதனூடாகத் தைமாதம் தோறும் தமிழர் மரபியல் விழாவை முன்னெடுத்து இளைய தலை முறையினருக்குப் பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்.

இலங்கையில் நடைபெற்றது இனப்படு கொலை என்ற தீர்மானத்தை 2009இல் அரச நிர்வாக அலகான மார்க்கம் மாநகரசபை வாயிலாக முதன்முதலாக நிறை வேற்றியவர் திரு லோகன் கணபதி. தைமாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அரச நிர்வாக அலகான மார்க்கம் மாநகரசபை யால் முதன்முதல் அங்கீகரிக்கச் செய்தவர் திரு. லோகன் கணபதி.

தமிழர் தாயகத்தின் நீங்கா அடையாளமாக மார்கத்தில் அமையவிருக்கும் புதிய வீதிக்கு 'வன்னி வீதி' எனப் பெயர் சூட்டியமை ஒரு வரலாற்றுப் பதிவாகியிருக்கின்றது.

தாயகப் போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மரங்களை நட்டு வருபவர். இவ்வாறாகச் சத்தமின்றி அவர் ஆற்றிவருகின்ற சேவைகள் பல.

அரச நிர்வாக அலகினூடாக மக்களுக்குத் தன்னலமற்ற சேவையாற்றுவதில் போதிய அனுப வமும் அறிவும் கொண்டவரான லோகன் கணபதி சமூகப்பணி தமிழருக்கும் அவர் பிரதிநித்துவப்படுத் துகின்ற அனைத்து சமூகங்களுக்கும் அவசிய மானதும் நிலைத்திருக்க வேண்டியதுமாகும்.



Newcomers, no credit history required*
at Canada's largest bank†.
FIRST CREDIT CARD
NO ANNUAL FEE AVAILABLE [1]
FIRST CAR
NEW OR USED CARS
FIRST HOME
$500 HOUSEWARMING GIFT [2]
Settle in faster with the RBC Newcomer Advantage™, no Canadian credit history required* for your first credit card, car or home.
Visit an RBC® branch or rbc.com/newcomers
at 1-800-769-2511
RBC®

ஓவியர் கருணாவின் ஓவியக் கண்காட்சி



ஓவியரும் சிறந்த ஒளிப்படக் கலைஞரும் வரைகலை வல்லுனருமாகிய இயூஜின் வின்சென்ற் (கருணா) 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கனடாவில் வாழ்ந்து வருகின்ற சிறந்தவொரு கலைஞராவர்.

பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கிய குடும்பப் பாரம்பரியத்தில் தோன்றிய கருணா சிறுவயதிலிருந்தே ஓவியத்துறையில் ஆர்வம் காட்டியவராவார். இவருடைய தாய்மாமனாராகிய திரு. மரியநாயகம் சிறந்தவொரு ஓவியராக அடையாளம் காணப்பட்டவர்.

ஓவியக்கலையில் பல பரிமாணங்கள் உண்டு என்பதைப் பலரும் அறிவர். தற்போது அதிகம் பேசப்படுகின்ற ஓவியங்களாக நவீன ஓவியங்களே திகழ்கின்றன. நவீன ஓவியக்கலையில் தனக்கென ஒரு தனிமரபைக் கொண்டிருந்தவர் ஓவியக்கலைஞர் மாற்கு அவர்கள். எளிமையாக வாழ்ந்த மாற்கு தமிழ் ஓவிய உலகில் பெரிதும் மதிக்கப்பட்ட கலைஞராவர்.

ஓவியக் கலைஞர் மாற்குவிடம் மிகுந்த விருப்பத்தோடு கருணா ஓவியம் பயின்றார். நவீன ஓவியத்தின் நுட்பங்களை அவரிடம் அறிந்தார்.

மாற்கு அவர்களிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவரான வாசுகி தன்னுடைய ஓவியக் கண்காட்சியொன்றை 1989இல் யாழ்ப்பாணத்தில் நடத்தினார். அந்தக் கண்காட்சியில் மாற்கு அவர்களின் பிற மாணவர்களின் ஓவியங்கள் சிலவும் வைக்கப்பட்டன. அதில் கருணாவின் ஓவியங்கள் சிலவும் இடம்பெற்றிருந்தன. இதுவே இவருடைய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்ட முதல் நிகழ்வாகும்.

தொடர்ந்து கனடாவில் குடியேறிய கருணா, கணினி மற்றும் வரைகலைத்துறைகளிலும் ஒளிப்படத்துறையிலும் ஆர்வம் காட்டினார். ஓவியப்பணியும் தொடர்ந்தது.

1993இல் மனித உரிமைகளுக்கான இலங்கையர் அமைப்பு கருணாவின் ஓவியங்களை ரொறன்ரோவில் காட்சிப்படுத்தியது. ஓர் ஓவியராக ரொறன்ரோவில் பலருக்கும் கருணாவை அறிமுகப்படுத்திய நிகழ்வு இதுவாகும்.

பின்னர், காலம் சஞ்சிகை 1996இல் மீண்டும் ஒரு தடவை கருணாவின் ஓவியங்களை முன்னிறுத்திக் கண்காட்சியொன்றை நடத்தியது. இந்த ஓவியங்கள் பலவும் பலராலும் பாராட்டப்பட்டன.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட 'முதுசம்' என்ற அமைப்பு 2004 இல் பதின்மூன்று யாழ்ப்பாண ஓவியர்களின் ஓவியங்களைக் காட்சிப்படுத்தியது.

கண்காட்சிக்காக அந்த அமைப்பு தேர்ந்தெடுத்த பதின்மூன்று ஓவியர்களுள் கருணாவும் ஒருவராக இடம் பெற்றமை பெருமைக்குரியதாகும்.

டிஜிட்டல் ஓவியக்கலை ஈழத்து ஓவியக்கலைஞர்களிடையே செல்ல நீண்ட காலம் பிடித்தது. 1992இல் முதல்தடவையாகக் கருணா டிஜிட்டல் முறையில் ஓவியங்களை வரைய ஆரம்பித்தார். கருணா டிஜிட்டல் முறையில் ஓவியங்கள் வரைய ஆரம்பித்த முதல் ஈழத்து ஓவியராகக் கருதப்படுகின்றார்.

இதுவரை நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்து இருக்கும் கருணா ஓவியத்திறனோடு ஒட்டிய வரைகலையிலும் சிறந்து விளங்குகின்றார். 500க்கு மேற்பட்ட நூல்களுக்கு அட்டைப்படங்களை வரைந்து வடிவமைத்திருக்கின்றார். நூற்றுக்கணக்கான சுவரொட்டிகள், பதாதைகளை உருவாக்கியிருக்கின்றார். பல்வேறு அமைப்புகள், மன்றங்களின் இலச்சினைகளை வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

சர்வதேசத்தரம் வாய்ந்த வரைகலை வடிவமைப்புகளைச் செய்துவரும் கருணாவின் ஆற்றலுக்குப் பலமாக இருப்பது அவருடைய ஓவியத்திறனே.

உலகளாவிய வகையில் தமிழ் ஓவியர்கள் பலரோடும் தொடர்புகளைப் பேணி, ஓவியக்கலை தொடர்பான தேடல்களைத் தொடர்ந்தவாறுள்ளார்.

கனடாவில் குடியேறிய காலத்தில் ஒளிப்படத்துறை அவருடைய தொழில்சார் துறையாகவும் இருந்தது. அதிவேகத் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுவரும் ஒளிப்படத்துறையோடு ஒட்டி வளர்ச்சி பெற்று, அதில் தேர்ச்சி பெற்றவராகவும் திகழ்கின்றார்.

மார்க்கம் பொங்கல் விழாவை முன்னிட்டு, ஜனவரி 14ம் நாள் மார்க்கம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஓவியக்கண்காட்சியில் இந்தத் தடவை கருணாவின் ஓவியங்கள் இடம்பெறுகின்றன என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய விடயமாகும்.


CAMBRIDGE ACADEMY
Cambridge Academy
PRIVATE SECONDARY SCHOOL
The teaching team at Cambridge Academy is excited about the innovative ways that we teach our students. Benefiting from our low student-teacher ratio, all students are given the opportunity to exceed and thrive in an environment that has countless benefits over other schools.
To many students, Cambridge Academy is an alternative to public education for those who have not been able to reach their full potential in traditional school settings. Many of these students enter our school and continue to grow—surpassing even their own expectations!
Our private school has helped many students achieve their goal of getting accepted at their choice of college or university.
Learn more at www.cambridgelearning.ca
5873, Highway 7 East, Markham, Ontario | 905-472-1706



வாழும் மொழிகளில் மூத்தமொழி தமிழ்மொழி

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை கனடா வளாகம்.

மனிதரால் பல்லாயிரம் ஆண்டு காலமாகத் தலை முறை தலைமுறைகளாக உருவாக்கப்பட்ட அரிய-தொரு தொடர்புச் சாதனமே மொழி. மொழி நாகரிகச் சின்னமாகவும் கருதப்படுகிறது. மொழியானது ஒலி-வடிவமும், எழுத்து வடிவமும் கொண்டது. குறிப்பிட்ட ஓர் இனம் தனக்குரிய ஒரு மொழியை உருவாக்கும் படிநிலைகளில் சைகைமொழி, போலிமொழி, உணர்ச்சி மொழி, பண்புமொழி எனவும், எழுத்துநிலையில் குறி-யீடுகள்,ஓவிய எழுத்து, வரிவடிவம் எனவும் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெறுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என மொழியியலாளர் கருதுவர். பேச்சுமொழியும் எழுத்துமொழியும் பழங்காலம் முதலாக வழங்கிவந்தபோதிலும், ஒரு மொழியில் முதலில் வளர்ச்சி பெறுவது பேச்சு மொழியே. அதன் பின்னர் பேச்சுமொழியுடன் பண்பாட்டு வளர்ச்சியின் காரணமாக எழுத்துமொழிதோன்றி, இலக்கிய இலக்க-ணங்களுடன் அம்மொழி வளர்ச்சியடைகின்றது. ஒரு மொழியின் ஒலியியல், சொற்பிறப்பியல், சொல்லமைப்பு என்பன அம்மொழியின் பழைமையையும் சிறப்பையும் வெளிப்படுத்துவனவாகும்.

இவ்வகையில் உலகில் 6809 மொழிகள் உள்ளன என்றும், அவற்றிற் பேச்சுவழக்கும் எழுத்துவழக்கும் கொண்டனவாக 700 மொழிகள் உள்ளன என்றும், அம் மொழிகளில் மிகவும் தொன்மையான மொழிகள்தமிழும் சீனமும் எனவும்பன்மொழி ஆய்வாளர் குறிப்பிடுவர். உலக நாடுகளில் சுமார் 77 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் தமிழ்மொழி 6000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்டுள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சிந்துவெளி நாகரிகத் தடயங்கள் பற்றி ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள் அங்குநிலவிய திராவிட நாகரிம் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்-பட்டது என்பர். எழுத்தியல் ஆய்வாளரானஐராவதம் மகாதேவன், சிந்துவெளி நாகரிக மக்கள் வழங்கிய மொழிக்கும் தமிழ்மொழிக்கும் இடையே காணப்பட்ட ஒற்றுமைகள் பற்றி ஆராய்ந்து நிறுவியுள்ளமை இங்கே கருத்திற் கொள்ளத்தக்கது. றொபேர்ட் கால்டுவெல் (1856), வரலாற்றுப் பேராசிரியர் எச். ஹிராஸ் பாதிரியார், ஜி.யு. போப், அஸ்கோபர்போலா முதலிய மேனாட்டு அறிஞர்கள் தமிழ்மொழியின் தொன்மையை சான்று களுடன் நிறுவியுள்ளனர். இவற்றையெல்லாம் நோக்கும் போது உலகில் வாழும் மொழிகளில் மூத்தமொழி தமிழ் என்பது தெளிவாகின்றது.

தமிழ் நாட்டில் இன்று கிடைக்கப்பெறும் தொல்லி-யல் சான்றுகளின் ஆய்வு முடிபுகளும், கடலில் மூழ்கிய பூம்புகார்ப் பட்டின ஆழ்கடல் ஆய்வு முடிபுகளும் தமிழகத்துப் பண்பாட்டுக் காலத்தைச் சிந்துவெளி நாகரிக காலத்துடன் ஒப்பிட்டு, தமிழரின் இருப்பைக் கி. மு. 10,000 ஆண்டுகளுக்கு மேலாகக் குறியிட்டுக் காட்டுகின்றன. மேலும், தமிழ் மக்களின் பூர்வீக காலத்தை அறிந்துகொள்ளும் வகையில் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் 1876இல் அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட [illegible] நாட்டு அறிஞர் டாக்டர் ஜாகர், அங்கு கி.மு. 10.000 ஆண்டுப் பழைமையுடைய மிகப் பெரிய முதுமக்கள் இடுகாடு ஒன்றைக்கண்டார். இது உலகிலேயே மிகப் பெரிய தொன்மையான இடுகாடு என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. அங்கு 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்துள்ளனர் என்பதும், அவர்களது மொழி தமிழ் என்பதும் அறியப்பட்டுள்ளன. அவர்கள் பேசிய தமிழ் மொழியே இன்றும் அங்கு தொடர்ந்து நிலைத்திருக்கிறது.அத்துடன் பூர்வீகத் திராவி மொழி-களின் மூத்த தொன்மைமொழி தமிழ்மொழியே என்பது றொபேர்ட் கால்டுவெல் தொடக்கம் இன்றைய மொழியி-யலாளர் வரையிலான அறிஞர்களின் கருத்துமாகும். எனவே இன்று உலகில் வாழும் மொழிகளில் தொன்-மையானது தமிழ் மொழியே என்பது நிரூபணமாகிறது.

தமிழ் மொழியை முச்சங்கங்கள் வளர்த்த வரலா-றும், அச்சங்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக 11,070 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தன என்ற தகவல்களும், சங்கப் புலவர்களால் அகத்தியம், முதுநாரை, முதுகுரகு, பஞ்சபாரதீயம், தொல்காப்பியம், எட்டுத்தொகை, ப[illegible] பாட்டு முதலான நூல்கள் எழுதப்பட்டமை பற்[illegible] இலக்கிய வரலாற்றுச் செய்திகளும் தமிழின் தொன்மைச் சிறப்பினைக் குறிப்பிடுகின்றன. கடல்கொண்ட குமரிக் கண்ட வரலாறும், தென்குமரி நாட்டிலே முதலிரு சங்கப் புலவர்களால் தமிழ்மொழி சிறப்புற்று விளங்கியமையும் பல்வேறு சான்றுகளால் நிறுவப்பட்டு வருகின்றது. தென்குமரியில் 49 தமிழ் நாடுகள் இடம்பெற்றிருந்தன எனத் தொல்காப்பிய உரை நூல்கள் குறிப்பிடுகின்றன. குமரிக்கண்டம் (Lemuria) காலத்திற்குக் காலம் ஆழிப் பேரலைகளால் அழிக்கப்பட்டமையைப் பூகம்பவியலா-ளர் நிரூபித்துள்ளனர். இத்தகைய பூர்வீகச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு தமிழ் வாழும் மொழியாகத் தொன்மைக் காலம் முதலாக வழங்கிவந்தமை அறியப்படுகின்றது.

தமிழ்மொழி உலகில் வாழும் மொழிகளில் மூத்த மொழி என்பதை உலகின் பழைய மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்தோரின் கருத்துக்களும் உறுதிசெய்கின்-றன. உலகில் பேசப்படும் பழைய மொழிகளில் தமிழ் மொழியின் சாயல் அல்லது சிதைந்த தமிழ் வடிவத்தில் வழங்கும் தமிழ்ச்சொற்கள்பிற மொழிகளில் வழங்கு வதை மொழியியலாளர் நிறுவியுள்ளனர். வடஆபிரிக்-காவில் அல்ஜீரியாவுக்கு அண்மையில் கம்றான் பிரதே-சத்தில் வாழும் இனக்குழுவினரின் பேச்சுமொழியில்

தமிழ் உச்சரிப்புடன் சொற்கள் வழங்குதல் அறியப்பட்டுள்ளது. குமரிக்கண்டத்தினரின் பழைய தமிழிலிருந்து திரிந்த மொழிகளில் ஒன்றே, ஆபிரிக்க மொழிகளில் ஒன்றான தமாஸித் (Tamazight language) மொழிஎன்ற செய்தியும் அறியப்படுகிறது. தமிழ்மொழிக்கும் பண்டைய சுமேரிய மொழிக்குமிடையே மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுதல் பற்றியும் மொழியியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சுமேரியமொழி பற்றி ஆராய்ந்தோர் அம்மொழியில் 50%ற்கும் அதிகமான சுமேரியமொழிச்சொற்கள் தமிழ்ச் சொற்களுடன் ஒத்த ஒலிப்புடன் காணப்படுவதை நிறுவியுள்ளனர். மேலும் அக்கேடியம், பாபிலோனியம், எகிப்தியம், முதலான பழைய நாகரிகங்களை ஆராய்ந்தோர் அவர்களின் பண்பாடுகளுடன் அழிந்த லெமூரியாக் கண்ட மக்களின் புலப்பெயர்ச்சியால் ஏற்பட்ட தொடர்புகளின் நல்ல விளைவுகளையும் குறிப்பிடும் செய்திகளும் தமிழ்மொழியின் தொன்மையைச் சான்றுபடுத்த உதவுகின்றன.

அண்மையில் ஈரோடு மாவட்டம், கொடுமணல் என்னும் ஊரில் மேற்கொண்ட அகழ்வாய்வின்போது 2500 ஆண்டுப் பழைமையுடைய வணிக நகரம் பற்றிய செய்திகளும், அங்கு அணிகலன்கள் உற்பத்தி செய்யப்பட்டமையும் அறியப்பட்டுள்ளது. இத்தகவல்கள் யாவும் தொன்மைத் தமிழரின் வாழ்வியல், அவர்கள் பயன்படுத்திய மொழி முதலான பல தகவல்களைத் தருகின்றன என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

தமிழ் மொழியில் கிடைத்திருக்கும் தொன்மையான தொல்காப்பியம் பண்டைத் தமிழ்மொழியின் இலக்கண நூலாகும். அது கி.மு. 700க்கு முற்பட்ட காலத்துத் பண்டைத்தமிழரின் பேச்சுமொழி, இலக்கிய வழக்காறு என்பவற்றின் இலக்கணங்களையும், மக்களின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் விடயங்களையும்,தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்புக்களையும் எழுத்து, சொல், பொருள் என்ற அடிப்படையில் விளக்கி ஆவணப்படுத்தியுள்ளமை தமிழ்மொழியின் அதிஷ்டமாகும். சங்ககால இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியவழியில் தோற்றம்பெற்று, செவ்வியல் இலக்கியங்களாக வளர்ச்சி பெறலாயின. சங்ககால இலக்கிய மொழி வழக்கையும், மக்களின் பேச்சு வழக்கையும் நன்கறிந்து கொண்ட தொல்காப்பியர், "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுத்தல்" என்பதற்கேற்ப, அக்கால இலக்கியங்களுக்கும் வாழ் வியலுக்கும் சிறந்த இலக்கணம்வரைந்தார்.

இவ்வாறுமுழுமையாக வளர்ச்சி பெற்றிருந்த தமிழ்மொழிக்கு வகுத்த இலக்கணத் தகவல்களின் அடிப்படையிலும் தமிழ் மொழியின் தொன்மையை நிறுவுதல் எளிதாகின்றது. பண்பாட்டு வளர்ச்சி பெற்ற ஒரு சமூகத்தின் மொழி, இலக்கியம், வாழ்வியல், பண்பாடு முதலியன பற்றிய கருத்துக்களைத் தொல்காப்பியம் தன்னகத்தே கொண்டுள்ளதால் அதன் தரவுகளை ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டுத் தமிழ்மொழிதொன்மையான மொழி என்பதை நிறுவுதல் ஆய்வாளர் கடமையாகின்றது. மேலும், சிந்து வெளியிலும், தமிழகத்திலும் ஈழத்திலும் தொல்லியல் ஆய்வுகள் முழுமையாக நடைபெறும்போது தமிழ் மொழியின் தொன்மை ஆதார பூர்வமாக மேலும் உறுதி செய்யப்பட வாய்யுகள் உள்ளன.

சம்ஸ்கிருதமொழியின் ஆளுமைக்குட்பட்ட மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளைப்போல் தம் தனித்தன் மையை இழக்காது, தமிழ் தமிழாகவே நிலைபெற்றது. தமிழ் மக்களும் புலவர்களும் சம்ஸ்கிருதத்திற்கு ஆட்படவில்லை. அதனால் தமிழின் புனிதம் பேணப்படுவதாயிற்று. ஆயினும் தமிழினம் சமயத்தினூடாக சம்ஸ்கிருதச் சொற்களை உள்வாங்கிக் கொண்டமை வரலாற்றின் நியதியாயிற்று.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆரியரது இடைச்செருகல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழரின் திருமணமுறைகள், சாதி அடிப்படையிலான மக்கட் பிரிவுகள், சமூக அமைப்புகள், அரசு முறைமை முதலானவை பற்றிக் கூறும் பகுதிகளில் ஆரியச் சார்பாளரகளாலேதிட்டமிட்டுப் பல நூற்பாக்கள் இடைச்செருகல் செய்யப்பட்டுள்ளன. சங்க மருவிய காலத்திற் தமிழ்மொழியிற் சம்ஸ்கிருதச் சொற்கள் சேர்ந்துகொள்வதிற்குச் சமண பௌத்த மதங்கள் பெரிதும் காரணமாயின. சமூகத்தில் மேலோர் கீழோர் என்ற பாகுபாடு, குடும்ப வாழ்க்கையில் பிராமணருக்கு முதன்மை அளித்தல்,எண்வகைத் திருமணங்கள் முதலிய விடயங்கள் பற்றிய நூற்பாக்கள் இடைச்செருகல்களே. இது குறித்துப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் (2008:15) கூறும் கருத்து ஈண்டு மிகப் பொருத்தமாகிறது:

"தமிழ் வேந்தரின் ஆட்சிநிலை தளரவே அரசியல், கல்வி, சமயம், நாகரிகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் இந்நாடு அயலார்க்கு அடிமைப்பட நேர்ந்தமையால், எத்துணைக் கூர்த்த மதியினரும் தம் தமிழ் நாட்டின் தொன்மைச் சிறப்பினை அறிந்து கொள்ளாதபடி அயலவர் கூட்டுறவு தமிழ் மக்கள் அறிவினைத் திரையிட்டு மறைத்து விட்டதென்றே கூறலாம். இந்நிலையில் சீர்த்த நுண்மாணுழை புலனமைந்த பேராசிரியர்களின் அறிவாற்றலையும் கடந்து பிற்றைநாளில் ஒரு சில பிழைகள் தொல்காப்பிய த்தில் இடம்பெற்றிருத்தல் இயல்பேயாம்"

தமிழ்மொழியின் தொன்மையையும் அதன் சிறப்பையும் மறுத்துரைக்கும் வகையில் ஆரியச் சார்புடையோர் பல்வேறு கருததுக்களை எழுதியதோடு, சம்ஸ்கிருதமே இந்தியாவின் முதல் மொழி என்ற கருத்தையும் வலியுறுத்தி வந்துள்ளனர். சான்றாக, பி. எஸ். சுப்பிரமணியசாஸ்திரியார் சம்ஸ்கிருதமொழியின் முதல் இலக்கண நூலாகிய ஐந்திரத்தின் வழியே தொல்காப்பியம் எழுதப்பட்டுள்ளது என்பர். சம்ஸ்கிருத இலக்கணம் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணத்துடன் ஒத்துச் செல்வதாகும். ஆனால் தொல்காப்பியம் தமிழ்மொழி இலக்கணம் மட்டுமன்றித் திராவிட மொழிக் குடும்பத்துடன் தொர்புடையது. தொல்காப்பியர் தனக்கு முந்தித் தோன்றிய இலக்கண நூல்களின் விதிமுறைகளையும் கருத்திற் கொண்டுள்ளமையை அவர் தொல்காப்பியத்தில் 166 இடங்களிற் குறிப்பிடுவர். கற்றறிந்த சான்றோனாகிய தொல்காப்பியர் சம்ஸ்கிருத இலக்கண மரபுகளையும் அறிந்திருந்தார் என்பதற்கும், அவர் நடுநிலைப் போக்குடையவர் என்பதற்கும் "தமிழில் வடமொழிச் சொற்களின் சேர்க்கை" பற்றி அவர் கூறும் இலக்கண விதிகள் சான்றாகின்றன.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பற்றி ஆராய்ந்த றொபேர்ட் கால்டுவெல் (1856) தமிழ்மொழியிலிருந்து சம்ஸ்கிருதமொழி பெருந்தொகையான சொற்களைக் கடன் வாங்கியுள்ளமையைச் சான்றுகளுடன் தந்துள்ளார். கால்டுவெல் சொற்பிறப்பியல் ஆய்வு மூலம் அடிச்சொற்களுக்கு (வேர்ச்சொற்கள்) முதன்மையளித்து, சொற்களின் மூல வடிவம் எது என்பதை அறியும் நுட்பத்தை அறிமுகம் செய்தார். குறிப்பிட்ட ஒரு சொல் எம்மொழிக்கு உரியது என்பதை நிறுவுவதற்கு அதன் அடிச்சொல்லே பெரிதும் துணையாகின்றது எனவும் நிறுவினார். ஆனால் காலப்போக்கிற் சம்ஸ்கிருதமொழி அறிஞர் வடமொழியிலுள்ள தமிழ்ச் சொற்களைச் சம்ஸ்கிருதச் சொற்கள் என நிறுவிவரலாயினர். அகத்தியர் இமயமலையிலிருந்து சிவனால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டவர் என்ற தொன்மக்கதையும் (ஆலவா) தமிழரின் உண்மை வரலாற்றுக்குப் புறம்பானது மட்டுமன்றித், தமிழ்மொழியின் தொன்மையை மழுங்கடிக்கும் தன்மையது.

ஒரு மொழியின் அமைப்பைக் கூறுவது இலக்கணம் மக்கள் வாழ்க்கைநெறியை முறைப்படக்கூறி, நெறிப்படுத்திக் காட்டுவது இலக்கியம். இலக்கியம், இலக்கணம் ஆகிய தமிழ்ச் சொற்களை சம்ஸ்கிருதச் சொற்கள் என்பர் வடமொழிப் பற்றாளர்.

இலக்கணத்திற்குக் குறி என்றும் தமிழிற் பெயருண்டு. 'குறி' என்பது இலக்கு என்பதால் வாழ்வின் இலக்கை விளக்குவது இலக்கியம் மொழியின் வரையறையை விளக்குவது இலக்கணம். எனவே இவை தமிழ் சொற்கள் மட்டுமன்றி, இலக்கணம், இலக்கியம் என்னும் இருசொற்களும் பண்டைத் தமிழரிடம் வழங்கி வந்தவையுமாகும். தொல்காப்பியம், கிளவி ஆக்கம் 27ஆம் நூற்பாவிலும் இலக்கணம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. சம்ஸ்கிருதத்தில் இலக்கணத்தை வியாகரணம் என்றும், இலக்கியத்தைச் ஸாஹித்யம் என்றும் வழங்குவர். 1950 - 1970 களில் பல்கலைக்கழகங்களிற் சம்ஸ்கிருதம், தமிழ், வரலாறு ஆகிய துறைகளின் கல்வியாளர்கள் திட்டமிட்டே பழந்தமிழ் மொழியையும் செவ்வியல் இலக்கியங்களையும் காலத்தாற் பிற்பட்டவை என எழுதி வந்துள்ளனர். தொல்காப்பியரையும் வடநாட்டுக் காவ்ய குலத்தவராகக் காட்டுவதிலும் அவர்கள் களிப்படைந்தனர். தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் “தொல்காப்பியனார் அகத்திய முனிவரால் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டவர்” என்ற தொன்மத்தை முதன்முதலிற் குறிப்பிட்டதோடு, தொல்காப்பியரை வடநாட்டு சமதக்கினியின் புதல்வரென்றும், அவர் திரணதூமாக்கினி என்னும் இயற்பெயருடையர் என்றும் தம் உரையிற் குறிப்பிட்டுள்ளமை விந்தையானது.

காப்பியன் என்பது பழந்தமிழ்க் குடிப்பெயர். தொல்காப்பியன் என்பது ஆசிரியரது இயற்பெயர் என்றும், அப்பெயரையே தாம் இயற்றிய நூலுக்கும் பெயரிட்டார் என்றும், தொல்காப்பியரின் சம காலத்தவராகிய பனம்பாரனார் தம் பாயிரத்திற் குறிப்பிட்டுள்ளார். காப்பிக்குடி என்ற வழக்குத் தமிழ் நாட்டிலும் இலங்கையிலே மட்டக்களப்பிலும் உள்ளது.தமிழ் நாட்டிலே நாகர்கோயிற் பகுதியிற் காப்புக்காடு என்ற கிராமம் உள்ளது. அதுவே தொல்காப்பியர் பிறந்த ஊர் என அறிஞர் பலர் கருதுவர். தொல்காப்பியன் என்னும் இயற்பெயர், அவரது காலத்திலேயே அவருக்கு வழங்கியிருக்க வேண்டுமென்பது உறுதி என க. வெள்ளைவாரணனார் தமிழ் மொழிப் பேரறிஞர் இலக்குவனார் ஆகியோர் கருதுவர்.

தொல்காப்பியர், சம்ஸ்கிருதத்திலுள்ள இலக்கிய இலக்கண விடயங்களை நன்கு உள்வாங்கி மெய்ப்பாட்டியல் இலக்கணம் செய்துள்ளார் என சம்ஸ்கிருதமொழியாளர் சிலர் கூறுவர். மானுடம் சார்ந்த மனித உணர்வுகள் மானுடர் அனைவருக்கும் பொதுவானது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நூற்பாப் பொருளையும், உணர்ச்சிகளைக் குறிப்பிடும் தூய தமிழ்ச் சொற்களையும் புரிந்து கொள்ளாது, தொல்காப்பியர் சம்ஸ்கிருத மொழியைத் தழுவி இலக்கணம் வகுத்தார் எனக் கூறி தொல்காப்பியர் காலத்தைப் பின்தள்ளுவதையே நோக்காகக் கொண்டனர். கலைகளோடு தொடர்புடைய பாவம், சுவை, உணர்ச்சி என்பன வற்றைத் தொல்காப்பியர் எட்டு வகை மெய்ப்பாடுகள் என்றும், அம்மெய்ப்பாடுகள் 32 வகையாக மேலும் விரிவுபெறும் எனவும் விளக்கியுமுள்ளார். பழந்தமிழரது நடனக்கலையின் இலக்கணத்தையே பரதமுனிவர் சம்ஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தில் நடனக்கலை. இசைக்கலை என்பன மக்கள் வாழ்வியலிற் பெரிதும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அக்கலைவாணர்மன்னராலும் மக்களாலும் போற்றி மதிப்பளிக்கபட்டனர். இளங்கோவடிகள் பண்டைத்தமிழரின் இசைக்கலை, நடனக்கலை என்பன அக்காலத்தில் எவ்வாறு வளர்ச்சியடைந்திருந்தன என்பதையே சிலம்பிற் பதிவுசெய்தார். இவற்றாலும் தமிழ் மொழியின் பழைமை அறியவருகின்றது.

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்திற் சம்ஸ்கிருதமொழி காலந்தோறும் ஆட்சியாளரின் அரவணைப்பைப் பெற்று வளமாக வளர்வதாயிற்று. பல்லவர் காலத்திலே தமிழரது கோயில்களிற் சம்ஸ்கிருதம் பூசைக்குரியதாகஏற்றம் பெற்றது. தமிழ் மக்கள் காலம் காலமாகக் குடியிருந்த பல ஊர்கள் பல்லவ மன்னராற் பிரமதேயங்களாகப் பிராமணருக்குவழங்கப்பட்டன. அவ்வூர்களில் வாழ்ந்த தமிழ்க் குடிகள் பிராமணருக்குக் குடிமைகளாக்கப்பட்டனர். சமயத்தின் பெயராற் பிராமணரும் சம்ஸ்கிருதமும் ஏற்றம்பெறவே தமிழும் தமிழ்ப் பண்பாடும் தன்னிலை தளர்வதாயின. 13ஆம் நூற்றாண்டில் மாலிக்கபூரின் படையெடுப்பாற் கோயில்கள் சூறையாடப்பட்டன.அதன் பின்னர் நாயக்கத் தளபதி குமாரகம்பணன் தமிழகத்தைக் கைப்பற்றியதோடு, பல கோயில்களைப் புனரமைத்து மீண்டும் சம்ஸ்கிருத மொழிக்கு உயிர்ப்பு அளித்தான்.தெலுங்கு நாயக்கர் தமிழகத்திலே தம் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்குச் சம்ஸ்கிருதத்திற்கு முன்னுரிமை அளித்துப் பிராமணரைத் தம் பக்கம் வைத்துக்கொண்டனர். இவ்வாறாக நடைபெற்று வந்தஆரியமயமாக்கத்திற்கு எதிராகத் தமிழகத்தில்1920களில் 'தனித்தமிழ் இயக்கம்' தோன்றியதும் நினைவுகொள்ளத்தக்கதே.

தமிழ்மொழியோடு சமமாக வைத்து நோக்கத்தக்க தொன்மை மொழி சீனமொழியாகும். சீனமொழியில் Han Chinese Classic Shijing (The Book of Songs) என்ற இலக்கியம் கி.மு. 11ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் தொகுக்கப்பட்டது எனவும், அதிலுள்ள பாடல்கள். இற்றைவரை சீனாவில் ஹூமன் மாகாணத்தில் திருமன நிகழ்வுகளில் பாடப்பட்டு வருவதாகவும் கூறப்படுதல் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

தமிழில் சம்ஸ்கிருதமொழிச் செல்வாக்குப் பற்றிப் பேசுவோர் சங்க காலத்தின் முன் எல்லையை கி.மு. 300 என வயைறை செய்து, சம்ஸ்கிருதமொழியின் காலத்தை கி.மு. 3000 எனவும் காலக்கணிப்புச் செய்துள்ளமை விந்தையிலும் விந்தையே. தமிழ் மொழியின் தொன்மை, அதன் சிறப்புக்கள்பற்றி ஆய்வு செய்த வெளிநாட்டறிஞர்களில் மொஸ்கோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரூசிய நாட்டுமொழியியல் அறிஞர் அலெக்சாந்தர் எம். உதுபியானஸ்கி தனது ஆய்வில், சம்ஸ்கிருதமொழிப் பற்றாளர் சிலர், தமிழ்மொழியின் செழுமையையும் அதன் தொன்மையையும் அறியாது எப்பொழுதும் தமிழ்மொழியைக் குறைத்துக் கூறுவதில் அக்கறை கொண்டுள்ளனர் என்று குறிப்பிடுவர். எனவே, உலகச் செம்மொழிகளின் வரிசையில் இடம்பெற்றுள்ள மொழிகளில் தமிழும் சீனமும் மூத்த மொழிகளாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன என நடுநிலையோடு எடுத்துரைக்கும் மொழியியலாளர்களின் கருத்தே ஏற்புடைத்தாகும்.

ஏர்மங்கலம்

பால சிவகடாட்சம்
B.Sc.Hons., B.Ed, D.I.C., Ph.D



நெற்பயிர்ச்செய்கையைத் திருவும் அருளும் இணைந்த மங்கலமான தொழிலாகவும் கடமையாகவும் கருதி அதற்கு ஏர்மங்கலம் என்னும் பெயரிட்டழைத்தனர் நம் பழந்தமிழ்ப் புலவர்கள். உலகத்தோர் சுழன்று சுழன்று எத்தொழிலைச் செய்யினும் அவர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுக்கு நாடுவது ஏர்பிடித்து நிற்கும் உழைப்பாளிகளையே என்பதை "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்று சுட்டிக் காட்டினார் வள்ளுவப் பெருந்தகை.

மற்றைய பயிர்களோடு ஒப்பிடுகையில் நெற்பயிரின் நீர்த்தேவை மிக அதிகம். ஆற்று நீர், குளத்து நீர், மழை நீர், கிணற்று நீர் என்று எங்கெல்லாம் போதிய அளவு தண்ணீர் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் நெற்ப் பயிர்ச்செய்கையைக் காணமுடியும். ஆற்று நீரையும் குளத்து நீரையும் முழுமையாகப் பயன்படுத்தித் தண்ணீர்ப்பஞ்சம் காணாத நிலங்களில்தான் செந்நெல் செழித்துவளரும். கூடிய விளைச்சலைப் பெற்றுத்தரும் நாற்று நடும் பயிர்ச்செய்கை முறையினைத் தண்ணீர் தடையின்றிக் கிடைக்கும் இடங்களில்தான் பின்பற்ற முடியும். நெற்பயிர் முற்றும்காலம் வரை வயல்நிலத்தில் ஐந்து சென்ரிமீற்றர் நீராவது தேங்கிநிற்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். நீர் மேலாண்மை (water management) பிழைத்தால் வேளாண்மை பிழைத்துவிடும்.

வெள்ளத்தை (நீரை) வீணாக்காது அதனைப் பக்குவமாகப் பயன்படுத்தும் திறன் நெற்பயிர் செய்வோரிடம் எதிர்பார்க்கப்படும் ஒன்று. வெள்ளத்தை ஆள்பவர்களே 'வெள்ளாளர்' ஆனார்கள். அவர்கள் செய்யும் தொழில் 'வெள்ளாண்மை' ஆயிற்று. நாளடைவில் வெள்ளாண்மை வேளாண்மை ஆகத் திரிந்தது. உழுதூண்மாந்தராகிய வெள்ளாளர் வேளாளர் ஆன கதை இது.

நெல்வெள்ளாண்மை என்பது கடுமையான உடல் உழைப்பை முழுமையாக வேண்டிநிற்கும் ஒரு முயற்சி. ஆற்றில் வெள்ளம் வரப்போவதை அல்லது மழை காலம் தொடங்கப்போவதை அறிந்ததும் விளைநிலத்தை உழுது பண்படுத்த வேண்டும். வரம்புகளைக் கொத்திச் சீர்செய்து நீரைத் தேக்கி வைக்கவேண்டும். எருவையும் தழையையும் சேர்த்து மண்ணுக்கு உரமூட்டவேண்டும். நீரைத்தேக்கி வைப்பதன் மூலமும் சேற்றை மட்டப்படுத்துவதன் மூலமும் களைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். இவற்றையெல்லாம் செய்துமுடித்த பின்னர்தான் விதைப்பு ஆரம்பமாகும்.

இன்று பயன்படும் செயற்கைப் பசளைகளைவிட நமது முன்னோர் பயன்படுத்திய எருவும் தழையுமே நீரின் தேவையைக் குறைக்கவும் மண்ணில் உப்புத் தன்மை அதிகரிக்காமல் தடுக்கவும் பெரிதும் உதவுவன என்பதை இன்றைய விவசாய ஆராய்ச்சியாளர் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

குறைந்த செலவில், குறைந்த நீர்த்தேவையில், கூடிய விளைச்சலைத்தரும் புதிய புதிய நெல்லினங்களைக் கண்டறிந்து பயிரிடுவதில்தான் நெல் விளைவிக்கும் நாடுகள் அக்கறைகாட்டி வருகின்றன. "வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்." உண்மைதான். அதேசமயம் எமது சந்ததியினருக்கு வளமான நிலத்தையும் தரமான விதைகளையும் விட்டுச் செல்வது பற்றியும் அல்லவா நாம் சிந்திக்க வேண்டும்.

இற்றைக்கு நூறுவருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் பயிரிட்ட பச்சைப்பெருமாள், மொட்டைக்கறுப்பன், முருங்கைக்காயன், மணல்வாரி, பாளைமுகரன், பன்றிக்சூரன், வெள்ளைவாலன், பவளச்சம்பா, குண்டை சம்பா, முத்துச்சம்பா, பெருநெல், அழகியவாணன், பஞ்சவாளை, குளவாழை, சின்னட்டி, பொன்னாயகன், மலையழகன், அச்சடியான், மைக்காத்தான், கார்குறுவை, காடைக்கறுப்பன், என்று எத்தனை எத்தனை நெல்வகைகள். இவையெல்லாம் இன்று எங்கே?

ஒவ்வொரு விதமான சுவையைத் தரக்கூடிய நெல் இனங்களைக் கைவிட்டு விட்டோம். அதேசமயம் நிலத்துக்கும் கிடைக்கக்கூடிய நீருக்கும் காலநிலைக்கு பொருத்தமான நெல் இனங்களைத் தெரிந்து பயிரிடும் வாய்ப்பையும் இழந்து விட்டோம். இன்று [illegible], திணைக்களம் தரும் நெல்லைத்தான் பயிர் [illegible]. பாரம்பரிய நெல் இனங்களைக் கைவிட்டாயிற்று. [illegible] திரங்களை நம்பி எருதுகளையும் கைவிட்டு [illegible] சேற்றில் வரிசையில் நின்றபடி

அயிலை நிகரும் விழிகள் புரள
அழகு பொன்முடி யசையவே
அவர வர்க்கொரு பிடிவகுத் துவைத்(து)
அதிதீவிரத்துடன் நாற்றுநடும்
கயிலி மயிலி குயிலி தையலி
கருவி திருவி யொருவி
காரி வாரி வீரி சூரி
கறுப்பி காத்தி கட்டைச்சி
(பறாளை விநாயகர் பள்ளு)

இவர்களைக் கைவிட்டுவிட முடியுமா? இவர்களின் துணையுடன் ஏர்பிடித்து உழுதும் வயலுக்கு நீர்பாய்ச்சியும் களைபிடுங்கியும் விளைந்த கதிரை அறுவடைசெய்தும் போர் அடித்தும் நெற்குவியலை அளந்து கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுத்தும் தாமும் உண்டு பிறரையும் உண்ணவைக்கும் காராளப் பெருமக்களைக் கைவிடமுடியுமா?

ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

என்னும் குறளில் நெற்பயிர்ச்செய்கையின் அத்தியாவசி-யமான நான்கு படிகளை எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர். முதலாவது படி உழுதல். நிலத்தை உழுவது எவ்வளவு அவசி - யமோ அதைவிட அவசியமானது அந்நிலத்துக்கு எரு இடுவது. உழுவது நெற்பயிருடன் போட்டி போடக்கூடிய களைகளைக் கட்டுப்படுத்தும் நிலத்துக்கு இடப்பட்ட எருப்பசளை பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும். அடுத்து நெற் பயிருக்கு மிக முக்கியமான தேவையான நீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும். இன்றேல் அதுவரை பட்ட பாடு எல்லாம் பாழாகிவிடும். அடுத்து நெற்கதிர் முற்றி அறுவடை-க்குத் தயாராகும்வரை பயிரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் பீடைகளும் காட்டுவிலங்குகளும் விளைச்சலைப் பெரிதும் பாதித்துவிடும். இத்தனை விடயங்களை-யும் வழக்கம் போல் வள்ளுவர் ஒரே ஒரு குறளில் சொல்லிவிட்டார்.

இன்று வள்ளுவர் வலியுறுத்திய ஒவ்வொரு படியிலும் விவசாயி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதைக் காண்கிறோம். இவற்றுள் தண்ணீர்ப் பிரச்சனையே பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. ஜனனக்குக் குடிக்கவே தண்ணீர் இல்லை. உனது நெல்லுக்குத் தரமுடியுமாஜி என்று ஆற்று நீரில் பங்கு பெறுபவர்கள் ஆளை ஆள் அடித்துக்கொள்கிறார்கள். தண்ணீரை மட்டுமே குடித்து உயிர்வாழமுடியுமா என்பதைக்கூட இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உழவுத் தொழிலுக்கு இன்று கிடைக்கும் மதிப்பு இதுதான்.

இத்தனை சிரமங்களுக்கும் மத்தியில் நாங்கள் ஏன் இத் தொழிலைச் செய்யவேண்டும் என்று உண்மையான கமக்காரன் கேட்கப்போவதில்லை. விவசாயம் அவனது தொழில் மட்டும் அல்ல. அது அவனது வாழ்க்கை முறை. இலாபத்தை எதிர்-பார்த்துச் செய்யாத தொழில் வேளாண்மை ஒன்றுதான்.

"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு நெல்லும் மிஞ்சாது" என்பது பழமொழி.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக் கெல்லாம் என்ற இலக்கு ஒன்றையே எண்ணி ஏர்பிடிக்கும் வேளாளருக்கே திருவாளர் என்னும் பெயர் உரித்தானது என்கிறார் கம்பர்.

நாம் சேற்றில் கால் வைத்தால்தான்

நீங்கள் சோற்றில் கைவைக்க முடியும்

என்று பேசாத உழவனுக்காகப் பேசினார் வைரமுத்து. யார் அதை நினத்துப் பார்க்கிறார்கள்.

பாராளும் வேந்தர் குதிரையும் யானையும் பூட்டக் கதிரவன் தன் தேரைப்பூட்டும் அதிகாலையில் ஏரைப்பூட்டும் ஏழைக் கமக்காரனை இன்று யார் நினைத்துப் பார்க்கின்றார்கள்.

'பார்பூட்டு மன்னர் பரிகரி பூட்டக் கதிரோன்

தேர்பூட்ட ஏர்பூட்டும் செம்பொற்கை"

(திருக்கை வழக்கம்: கம்பர்)

"கல்லார்கள் என்னாமல் கற்றோர்கள் என்னாமல்

எல்லோரையும் காத்து ஈடேற்றும் கை" என்று

கம்பநாட்டாழ்வார் போற்றும் காராளர்கை இன்று கமநல வங்கிகளிடம் கடன்கேட்டுக் காத்து நிற்கின்றது.

(திருக்கை வழக்கம்: கம்பர்)

பயிர்ச்செய்கையின் சிறப்பை, அதன் முக்கியத்துவத்தை இன்றைய இளம் தலைமுறையினருக்கு உணர்த்துவதில் நாம் தோல்வியடைந்துவிட்டோம். அரிசி எங்கே இருந்து வருகின்றது என்று கேட்டால் பல்பொருள் அங்காடியில் பெற்றுக்கொள்ளலாம் என்று பதில் சொல்லும் சிறார்களைக் காண்கிறோம். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் "என் தந்தை ஒரு விவசாயி" என்று சொல்வதற்கு வெட்கப்படும் இளம் சந்ததியைக் காண்கி-றோம். இந்த நிலையில் எதிர்காலத்தில் நான் ஒரு விவசாயி ஆக வர விரும்புகின்றேன் என்று கூறும் ஒரு மாணவனைக்காண முடியுமா?

ஆயுதம் செய்வதற்கும் தொழிற்சாலைகள் வைப்பதற்கும் கொடுக்கப்படும் முன்னுரிமை விவசாயத்துக்குக் கிடைக்கின்றதா? உணவு உற்பத்தித் துறையை உதாசீனம் செய்யும் நாடுகள் தம் தவறை உணர்ந்து கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய


ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநா டகம்நடக்கும்

சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயநடக்கும்

பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே

(ஏர் எழுபது: கம்பர்)

மழை நடக்கும் படி நடக்கும் வேளாளரின் ஏர் நடந்தால் இயல் நடக்கும் இசை நடக்கும் நாடகம் நடக்கும். செல்வம் நடக்கும். தர்மம் நடக்கும். இந்தப் பூமி நடக்கும். படையும் நடக்கும். பசி மட்டும் நடக்காது என்று கம்பன் கூறும் உண்மையை மறக்காது இருப்போமாக.



தமிழ்க்கல்வி - பரிந்துரைக்கப்படும் மாற்றங்கள்



பொன்னையா விவேகானந்தன் எம். ஏ.
பன்மொழிக் கல்வித் திட்ட அலுவலர் - ரொறன்ரோ கல்விச் சபை
விரிவுரையாளர் - அண்ணாமலை வளாகம் - கனடா

உள்நாட்டுப் போர் காரணமாகத் தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்த தமிழர் பலரும் வாழும் நாடுகளில் தமது வாழ்வை நிரந்தரமாக்கிக் கொண்டுள்ளனர். தாங்கள் வாழுகின்ற பன்முகப் பண்பாடு கொண்ட நாடுகளில் தாமும் தனித்துவ பண்பாடு கொண்ட இனமாக அடையாளப்படுத்தி வருகின்றனர். அடிப்படையான பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்து கொண்டு தமது இருப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இவ்வாறான முயற்சிகளில் முதன்மைமிக்கதொன்றாகத் தமிழ்க்கல்வி திகழ்கின்றது. குடியேறிய வாழ் புலங்களில் அந்நாடுகளுக்குரிய மொழியே முதல் மொழியாகி விட்ட நிலையில் தாய்மொழி இரண்டாம் மொழியாக மாறிவிட்டிருக்கின்றது. இரண்டாம் நிலையில் தாய்மொழியைக் கற்பதானது, பெற்றோருடைய தீவிர முயற்சியிலும் மாணவரின் ஈடுபாட்டிலுமே தங்கியுள்ளது. இவ்வாறான நாடுகளில் கற்பிக்கப்படும் தமிழ்க்கல்வியைப் பயன்மிக்கதாகவும் மாணவரின் விருப்பத்துக்குரியதாகவும் கற்பிக்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ்க் கல்விசார் அமைப்புகளுக்கும் சமூகத்துக்கும் உண்டு.

தற்போது தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்ற வழிமுறைகளில் பாரிய மாற்றம் தேவை என்பதைக் கல்வியாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். எதிர்காலத்தில் தமிழ்க்கல்வியை எவ்வாறு அணுக வேண்டும் என்பதற்கான சில பரிந்துரைகளை இக்கட்டுரை தருகின்றது.

புலம்பெயர் புலங்களில் தமிழ்க்கல்வி:

தமிழ்மொழிக்கல்வியை பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

- தமிழே மூல மொழியாக இருக்கும் சூழலில் அதனையே முதல் மொழியாகவும் கற்கும் முறை. (எ-டு தாயகத் தமிழ்க்கல்வி)
- தமிழ்மொழி வீட்டு மொழியாகவும் தொடர்பாடல் மொழியாகவும் பேணப்பட்டுவரும் சூழலில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் முறை.
  எ-டு (சிங்கப்பூர், மலேசியா தமிழ்க்கல்வி)
- இயற்கை, பண்பாட்டுத் தளங்களில் பெரிதும் மாறுபட்ட நாட்டில் பிறிதொரு மொழியின் பேராதிக்கம் மிக்க சூழலில் தமிழ்த் தலைமுறையினர் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் முறை. (எ-டு வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்.)
- தமிழர் அல்லாத பிறவினத்தோர் விருப்பமொழியாகத் தமிழைக் கற்கும் முறை.

உலகெங்கும் தமிழ் கற்பிக்கப்படும் முறைகளை மேற்குறிப்பிட்ட நான்கு பகுப்புகளுக்குள் அடக்கி விடலாம்.

இவற்றுள் சவால்களும் இடர்களும் மிக்கவை வ[illegible] அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ்த்தலைமுறையினருக்குத் தமிழ் பயிற்றுவிக்கப்படும் முறைகளே ஆகும். ஏறக்குறைய பதினைந்து [illegible]ண்டுகளுக்[illegible] முன்பாக இந்த நாடுகளின் கற்பித்தல் முறைகளும் சிங்கப்பூர், மலேசிய கற்பித்தல் முறைகளும் பெரிதும் ஒத்திருந்தன. அக்காலப் பகுதிகளில் புலம்பெயர்ந்[illegible] வீடுகளிலும் தொடர்பாடலிலும் தமிழே பெர்[illegible]

இந்நாடுகளுக்குரிய மொழியையே முதன்மொழியாகக் கொண்ட மூன்றாம் தலைமுறையினர் மாணவ[illegible] சமூகமாகத் தலையெடுத்துக்கொண்டிருக்கும் இந்[illegible] காலகட்டத்தில் தமிழ்மொழிக் கற்பித்தல் முறைகள் மாற்றத்துக்குள்ளாக வேண்டிய வலுக்கட்டாய [illegible] தோன்றியுள்ளது.

வட அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரே[illegible]களில், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்[illegible]வான சிறப்பான மொழி கற்பித்தல் உத்திகள் பின்பற்றப் படுவதாகக் கூற முடியாது. இந்நாடுகளில் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தமக்கென உருவாக்கிக் கொண்ட கற்பித்தல் முறைகளையே பின்பற்றி வருகின்றன. கற்பிக்கும் ஆசிரியர் சிலர் தத்தமது ஆற்றலுக் கேற்ப, கற்பித்தல் உத்திகளை அறிந்தும் உருவாக்கியும் கற்பித்து வருகின்றனர். இக்கற்பித்தலில் பெரிதும் தாயகச் சாயல்களையும் சிங்கப்பூர், மலேசிய கற்பித்தல் முறைகளையுமே அவதானிக்கலாம்.

மேற்கூறப்பட்ட கற்பித்தல் சூழலுக்கான நிறைவான உத்திகள் இச்சமூகத்தாரிடையே இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு நிறைவானதும் பொதுமையானதுமான கற்பித்தல் உத்திகள் கண்டறியப்பட வேண்டும்.

இக்கல்விச் சூழலோடு நீண்டகாலமாக இணைந்திருந்து பெற்ற அனுபவத்தையும் மொழி, மொழியியல் அறிவும் உலகளாவிய மொழிக்கல்விக் கோட்பாடுகள் பற்றிய தெளிவையும் வாழும் நாட்டினது கல்விக்கொள்கை பற்றிய புரிதலையுமுள்ளோரே புதிய கற்பித்தல் உத்திகளைக் கண்டறிந்து வகுக்கவும் வல்லோர் ஆவர்.

தமிழ்மொழி கற்பித்தல் சிறக்கச் சில வழிமுறைகள்:

- மாணவர் தொடர்பாடல் வல்லமை பெற்றிருக்கும் மூலமொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை மொழி கற்பிக்கும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். தெரிந்த மொழியினூடாகவே புது மொழியினைச் சிறப்பாகக் கற்பிக்கவியலும்.
- தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் சிறந்த தமிழ்மொழி அறிவும் கற்பிக்கும் ஆற்றலும் கொண்டிருக்க வேண்டும்.
- இடத்துக்கு இடம், பள்ளிக்குப் பள்ளி வேறுபட்ட கற்றல் சூழ்நிலைகளைக் கொண்டிருப்பனவாகும். அவ்வாறான கற்றறல் சூழ்நிலைகளை ஆசிரியர் நன்கு புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
- கற்பித்தல் நடைபெறும் ஒவ்வொரு வகுப்பு முடிவிலும் மாணவரின் கற்றல் மேம்பாட்டினை மதிப்பிடுவதை முக்கிய அலகாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இரண்டாம் மொழியாகக் கற்கும் மொழி பற்றிய அறிவில் ஏற்றத்தாழ்வு கொண்டோரைக் கண்டறிந்து அவர்களைத் தனித்தனிக் குழுக்களாக்கிக் கற்பிக்க வேண்டும்.
- கற்றல் திறன்கள் மாணவருக்கு மாணவர் வேறுபட்டனவாகும். அவற்றை கண்டறிந்து அதற்கேற்ப பொருத்தமான வகுப்பறைச் செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- Differentiating Instruction என்னும் பன்முக நுண்ணறிவுக் கோட்பாட்டு வழிக் கற்பித்தல்முறைக்கேற்ப, வகுப்பறைச் செயற்பாடுகள் (Activities) இருக்க வேண்டும்.
- மாணவருடைய தேவைக்கும் தேடலுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாணவர் மையக் கல்வி முறை வகுப்பறையில் கையாளப்பட வேண்டும்.
- மாணவர் மொழிக்கல்வியில் அக்கறை கொள்ளவில்லையெனில் அதன் காரணத்தைக் கண்டறிவதில் தீவீரமாக இருக்க வேண்டும். காரணம் கண்டறியப்பட்டவுடன் உடனேயே நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
- பெற்றோருடன் தொடர்பு கொண்டு மாணவரது முன்னேற்றம் குறித்துப் பேச வேண்டும்.

எனினும் இத்துறை சார்ந்து மேலும் பல புதிய கற்பித்தல் முறைகள் கண்டறியப்படல் வேண்டும்.

புதிய கற்பித்தல் உத்திகளைக் கண்டறிவதற்கான அடிப்படைகள்:

கல்விச் சூழலையும் மாணவரையும் நன்கு புரிந்துகொண்டபின், அப்புரிதலின் அடிப்படையில் புதிய உத்திகளுக்கான தேவையை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். மொழிக்கல்வியில் மாணவரைப் புரிந்துகொள்ளுதல் அடிப்ப டையானது என்பதை மேலே குறிப்பிட்டிருந்தோம். இப்புரிதலின் அடிப்படையில் மாணவர் சமூகத்தை இருவகையாக வகுக்கலாம்.

- ஆரம்பநிலை முதல் தமிழைக் கற்று வருவோர்.
- இடைநிலைகளில் இணைந்து தமிழைத் தொடக்கத்தில் இருந்து கற்க முனைவோர்.

இந்த இரு பகுப்பினருக்குமான கற்றல் இலக்குகளும் கற்பித்தல் உத்திகளும் வெவ்வேறானவை என்பதை உத்திகளை வகுப்போரும் கற்பிப்போரும் தெளிவாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.

தமிழ்மொழியைக் கற்கும் மாணவர் ஸ்ரீமொழியின் தேவைஷீ மிகத் தெளிவாக உணரப்பட வேண்டும். தமிழ்மொழியைக் கற்கும் மாணவரது முதன்மை இலக்கு தமிழ் மொழியில் அவர்கள் தொடர்பாடலை மேற்கொள்ளும் வல்லமை பெற வேண்டும் என்பதாகவே பெரிதும் அமைகின்றது. தமது வாழ்வில் பெரும்பாலான தருணங்களில் அல்லது எல்லாத் தருணங்களிலும் நிறைவாகவும் எளிதாகவும் தொடர்பாடலை மேற்கொள்ளவல்லதாக அந்தந்த நாட்டுக்குரிய மொழியே திகழ்கின்றது. தமிழில் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டிய வாய்ப்புகளை மிகக் குறைவாகக் கொண்டோராகவே இளைய தலைமுறையினர் காணப்படுகின்றனர். ஆங்கில மொழிச் சூழல் கொண்ட நாடுகளில் கடந்தகாலத் தமிழ் கற்பித்தலில் இவ்விலக்கைத் தொட்டோரது விழுக்காடு மிகக் குறைவே. பொருத்தமற்ற கற்பித்தல் உத்திகளும் இக்குறைவுக்குக் காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர் தமிழ்மொழியை ஓரளவேனும் விளங்கிக்கொள்ளவும் பேசவும் வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருத்தல் இக்கற்பித்தலின் ஓர் இலக்காக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. அதேவேளை பிற இலக்குகள் சிலவற்றையும் நாம் மொழி கற்பித்தலில் இணைத்துக் கொண்டாகவேண்டும்.

மொழிக்கல்வியில் மாணவருக்கு ஈர்ப்பு ஏற்பட வேண்டுமாயின் நாம் தொன்மையும் சிறப்பும் மிக்க தமிழ் இனத்தைச் சார்ந்தோர் என்ற பெருமையுணர்வு மாணவருக்கு ஏற்படவேண்டும். ஏதோவோர் அந்நிய மொழியைப் படிப்பது போன்ற உணர்வு தமிழ் கற்கும் மாணவருக்கு இருத்தலாகாது. இவ்வுணர்வை ஊட்டுதல் இக்கற்பித்தலில் ஓர் இலக்காக அமைதல் வேண்டும்.

பண்பாட்டிலும் தனித்துவ அடையாளங்களிலும் பெரும் வேறுபாடுகளைக் கொண்ட பல்லினத்தோர் இணைந்து வாழ்கின்ற சமூகச் சூழலில் ஒவ்வோர் இனமும் தம் தனித்துவ அடையாளங்களைப் பேணியும் வெளிப்படுத்தியும் வாழ வேண்டியது அவசியமாகும். முதலாம், இரண்டாம் தலைமுறையினர் தம் வாழ்வோடு இணைந்திருக்கின்ற பண்பாட்டு விழுமியங்களை இயல்பாகவே வெளிப்படுத்தியிருப்பர். இவர்களுக்குப் பின் தொடரும் தலைமுறையினரது வாழ்வில் இனஞ் சார்ந்த தனித்துவ அடையாளப் பேணல்கள் இயல்பாக இணைந்திருக்கும் வாய்ப்பு குறைவடைந்து செல்லும். எனவே மொழிக்கல்வியில் தமிழர் பண்பாடு, தனித்துவ அடையாளங்களைத் தெரிந்து கொள்ளுதல் மற்றோர் இலக்காகக் கொள்ளப்பட வேண்டும்.

தமிழர் தமிழகம், ஈழம் என்ற தேசங்களைத் பூர்வீகத் தாயகங்களாகக் கொண்டிருந்த போதிலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் நிரந்தரமாகக் குடியேறியுள்ளனர். தமிழர் எங்கு வாழினும் அவர்களுக்கிடையான தொடர்பும் உறவும் பேணப்பட வேண்டும். இல்லையாயின் காலவோட்டத்தில் ஒவ்வொரு நாட்டில் வாழ்வோரும் தனித்தனித் தீவுகளாகப் பிரிந்து விடுவர். உலகளாவிய தமிழர் தொடர்பாடும்படியான இணைப்புகள் மொழிக் கல்வியில் இடம்பெற வேண்டும்.

மாணவர் மையக் கல்வி, நுண்ணறிவுக் கோட்பாட்டுக் கற்பித்தல் போன்ற புதிய கற்பித்தல் முறைகளும் கணினி வழி

சார்ந்த தகவல் தொழினுட்பங்களும் மொழி கற்பித்தலில் நிறைவான அளவு பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த அடிப்படைகளை நன்கு உணர்ந்த பின்னரே கற்பித்தலுக்குரிய இலக்குகளை வகுத்து உத்திகளைக் கண்டறிதல் வேண்டும்.

பண்பாட்டு மொழி

புலம்பெயர்ந்தோரது மொழிக்கல்வி பெரும்பாலும் தொடர்பாடல் பயன்பாட்டை மையப்படுத்தியே கற்பிக்கப்படுகின்றது என்பதை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். தொடர்பாடலுக்கான தமிழ்மொழியின் தேவை குறைந்து செல்லும்போது இக்கற்றல் மீதான ஈர்ப்பும் குறைவடைந்து செல்லும். அதற்காகவே மேற்குறிப்பிட்ட இலக்குகள் இணைக்கப்பட வேண்டும் என இக்கட்டுரை கூறுகின்றது.

இந்நாடுகளில் எதிர்காலத்தில் தோன்றவிருக்கும் தலைமுறையினர் தொடர்பாடல் என்னும் நிலையில் தமிழைப் பயன்படுத்த முடியாதிருப்பினும் தமிழருக்கான பண்பாட்டு விழுமியங்களை இழக்காதவராகவும் இன அடையாளங்களைச் சுமந்து செல்பவராகவும் தாம் தமிழர் என்னும் பெருமை மிக்கோராகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறான தமிழரை உருவாக்க மிக நேர்த்தியாகத் திட்டமிட்ட மொழிக்கல்வியாலேயே முடியும். இவ்வாறான மொழிக் கல்வியை 'பண்பாட்டு மொழிக்கல்வி' (Cultural Language Education) என்பர். புலம்பெயர்ந்து வாழும் யூத மக்களும் சீக்கிய மக்களும் இவ்வாறே தம் இன அடையாளங்களைத் தொடர்கின்றனர். அவர்களது மொழி, மதத்தோடு இரண்டற இணைந்திருப்பது அவர்களது பெரும் பலமாகும்.

இந்நாடுகளில் வாழும் தமிழரிடையே மொழிக்கல்வி பண்பாட்டு மொழி என்னும் வடிவத்தை இன்னும் பெறவில்லை. விரைவில் இந்நாடுகளில் மொழிக்கல்வி, பண்பாட்டு மொழி வடிவம் பெற வேண்டும். இந்நாடுகளில் வாழும் மொழிக் கல்வியாளரும் ஏனைய தமிழ்ச் சான்றோரும் இப்பணியை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.



தமிழர் மரபு

திருமதி லீலா சிவானந்தன்



தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, செம்மை என்ற பொருளும்உண்டு.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்"

என்பார் பாரதியார். "உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்பார் மீனாட்சி சுந்தரனார். "தமிழ்மொழி பழைமை மிக்க உயர் தனிச் செம்மொழி" என்பது ஆய்வாளர்களார் நிறுவப்பட்டுள்ளது. வளம்மிக்க சொல்லாட்சியுடன் வளர்ச்சியடைந்த தோடு இன்றுவரையும் வளம்மிக்க மொழியாகத் திகழ் கின்றது. திராவிட மொழிக்குடும்பத்தில் முதன்மையான தும் தலையாயதுமான தமிமொழி, 2500 ஆண்டுகளுக்கு மேலான இலக்கிய இலக்கண மரபுகளைக் கொண்டு உள்ளது.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழினமும் தொன்மையான நாகரிகமுடைய மக்கள் இனங்களில் ஒன்றாகும். ஆதிச்சநல்லூரில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கி.மு. 1000 ஆண்டு காலத்துக்குரிய மட்பாண்டங்கள் தற்காலத் தமிழ்நாட்டில் தமிழர்கள் வாழ்ந்ததற்குச் சான்றாக விளங்குகின்றன. 2700 ஆண்டுகளுக்கு முன்னது என்று கூறப்படும் தமிழில் எமக்குக் கிடைத்த முதல் நூலான தொல்காப்பியத்தைப் படிக்கும் போது நீண்டகாலத்துக்கு முன்னரே தமிழ்மக்கள் எல்லா வகையிலும் சிறந்து விளங்கிய முன்னேற்றமடைந்த பாரம்பரியம் மிக்க பண்பாட்டைத் தமிழினம் கொண்டதாக இருந்து வந்தது என்பதை அறியக் கூடியதாக உள்ளது. அதே போல தொல்காப்பியத்துக்குப் பின்னர் எழுந்த சங்க இலக்கியங்களும் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் தமிழர் சிறந்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர் வாழ்வை அகவாழ்வு புறவாழ்வு என்றும் பண்பாட்டை அகப்பண் பாடு, புறப்பண்பாடு என்றும் வகுத்தனர். இதைக் காலம் காலமாகப் போற்றியும் வந்தனர். அந்தந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் அந்தந்தக்கால மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், அரசு, ஆட்சி போன்றவற்றையும் அவற்றின் படிமுறை வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன.

தொல்காப்பியம் கூறும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலங்களும் அவற்றுக்கான அக ஒழுக்கங்களும், புற ஒழுக்கங்களும் பற்றி சங்கப் பாடல்கள் சிறப்பாக விபரிக்கின்றன. அத்துடன் அக்கால மக்களின் உயர் குணங்கள், விருந்தோம்பல், கொடை, கொல்லாமை போன்ற பண்புகளையும் எடுத்துரைக்கின்றன.

விருந்து புறத்ததாத் தானுண்ணல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று''
என்பார் திருவள்ளுவர்.

பண்பாட்டை, அகப்பண்பாடு, புறப்பண்பாடு என்று இருவகையாகப் வகுத்துப் பொருள் கூறுவர். அகப் பண்பாடு என்று சொல்லும் போது அது அகம் சார்ந்தது, அதாவது உளம், மனம் சார்ந்தது. புறப்பண்பாடு வெளித் தோற்றம் சார்ந்தது.

ஒருவர் நற்குணம் உடையவராய் பிறருக்கு உதவும் பண்பினராய் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த நோக்குடையவராய், முல்லைக்கொடிக்குத் தேரை ஈந்துவிட்டு நடந்து தன் அரண்மனை சேர்ந்த பாரி போன்ற வள்ளற் தன்மை உடையவராய், பெரியோரைப் போற்றுபவராய், அறம் சார்ந்து நிற்பவராய், எளிமை யானவராய், ஈகை, விருந்தோம்பல் குணமுடையவராய் இருப்பது அகப்பண்பாட்டின் பாற்படும்.

ஒருவரை நீங்கள் சந்திக்கும் போது அவர் பெரியோராய் இருப்பின் வணங்குதல், சிறியோராயின் ஆசி கூறுதல் உற்றார், நண்பரின் இன்பத்திலும், துன்பத்திலும் துணையிருத்தல், இல்லார்க்கு உதவி செய்தல், உங்கள் புறத்தோற்றம் - முக்கியமாக ஆடை, அணிகலன் போன்றவை புறப்பண்பாட்டின்கீழ் வரும் என்பது அறிஞர் கருத்தாகும். தனிநாயகம் அடிகளார் அதனுடன் மொழி, இலக்கியம், நுண்கலைகள், சிற்பம், ஓவியம், கட்டிடக் கலை, பழக்க வழக்கங்கள், மருத்துவம், வாழ்க்கை முறை, உணவு, உடை, விளையாட்டு, விழாக்கள், வழிபாட்டு முறைகள் போலான மரபுரீதியாகப் பேணப் பட வேண்டியவை என்றும் கூறுவார். இந்தப் பண்புகள் காலம் காலமாகத் தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழிவழியாகத் தமிழ் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றைப் பேணிக்காப்பதுடன் அடுத்த தலை முறைக்கு எடுத்துச் செல்வதும் நமது கடமையாகும்.

இப்போது மரபு என்றால் என்னவென்று பார்ப்போம் மரபு என்பது ஒரு குழு அல்லது ஒரு சமூகம். அதன் முந்தைய தலைமுறைகளிடம் இருந்து பரம்பரை பரம்பரையாகப் பெற்ற வளங்களைப் பேணி வளர்த்துக் காத்து அடுத்து வருகின்ற தலைமுறைக்குக் கையளிப் பதாகும்.

தொல்காப்பியம் கூறும் ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றில் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமு மாகும். இந்த நிலத்தில் வாழ்ந்தோர் பெரும்பாலும் உழவுத் தொழில் புரிந்தோராவர். அரிசி தமிழரின் முக்கியமான உணவுப் பொருளாக விளங்குகின்றது. உழவர் நிலத்தைப் பண்படுத்த இயற்கையோடியைந்த வாழ்வு வாழ்ந்து இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்களைப் பெற்று உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்கிறான். அவன் உணவுப் பெருக்கத்தை உருவாக்குவது அதற்காக கால்வாய்கள் வெட்டுவது போன்ற வேலைகளைச் செய்கிறான். வயலில் உழுது பயிரிட்ட நெல்லை அறுவடை செய்து வீட்டுக்குக் கொண்டு வந்து சுற்றமும் நட்பும் சூழ, மனைவி, மக்களுடன் மகிழ்ச்சியுடன் பொங்கல் செய்து கொண்டாடு வதன் மூலம் பயிர்வளர மழை கொடுத்த சூரியனுக்கும் அதற்கு உதவிய கால்நடைகளுக்கும் நன்றி கூறும் தினமாகவும் கொண்டு பண்பாட்டிற்கு ஏற்ப உடை அணிந்து ஒரு பண்டிகையாக உழவர் திருநாளாகக் கொண்டாடுகின்றான். இது சமுதாய வளர்ச்சியையும், பண்பாட்டு வளர்ச்சியையும் காட்டி நிற்கிறது எனலாம்.

“தை பிறந்தால் வழிபிறக்கும்” என்ற பழமொழியும்,
“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”

என்ற பாரதி வாசகமும் தமிழரின் பண்பாட்டுச் சிறப்புக்கு ஒரு சான்றாகும். தைமாதம் முதல் நாள் பொங்கல் நாள் உழவன் தன் உழைப் பின் பலனை நுகரத் தொடங்கும் நாள் தன் உழைப்பின் முதற் பயனை இறைவனுக்குக் கொடுத்து அதன்பின் சுற்றத்த வர்க்கும் மற்றவர்க்கும் கொடுப்பது பண்டு தொட்டுவரும் தமிழரின் பண் பாட்டு மரபாகும்.

யானை நிரையுடைய தேரேறினும் சிறந்தோர்
ஏனை நிரையுடைய ஏர் வாழ்நர்.

இதற்கமைய, மன்னர்கள் பலரும் குளங்கள் கட்டி நீர்ப் பாசனம் பெருக்கினர். கரிகாலன் என்ற சோழமன்னன் திருச்சியில் காவிரி ஆற்றின் மீது கட்டிய கல்லணை மிகப் பழைமையானது. இந்த அணை கி.பி. 2ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தமிழரின் நீர் மேலாண்மைக்கு இது சிறந்த சான்றாகும். மண்ணில் அடித்தளம் அமைத்துக் கல்லணையைக் கட்டிய பழந்தமிழர் தொழில்நுட்பம் இன்றளவும் வியத்தகு சாதனையாகப் போற்றப்படுகின்றது. இது பற்றிச் சங்ககால நூல்களான பட்டினப்பாலை பொருநராற்றுப் படை ஆகியவை கூறும்.

தமிழையும், கலையையும் ஒன்றுபடுத்தி முத்தமிழ் என அழைத்தனர் தமிழர். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்த்தெடுத்த பெருமை தமிழருக்குரியது. மனத்திற்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் அளிக்கக்கூடிய வல்லமை இசைக்கு உண்டு. மிகப் பழைமையான பாரம்பரியமும் இசைக்கு உண்டு. இறைவனை வழிபடப் பாடிய இசை பின்னர் மக்களை மகிழ்விக்கும் கலையாக மாறியது. சங்க இலக்கியத்தில் இசைக்கலைஞர்கள், ஆண்கள் பாணர்கள் என்றும் பெண்கள் பாடினியர்கள் என்றும் அழைக் கப்பட்டனர். பெரும்பானாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை பாணர் களை முக்கியமாக வைத்து எழுதப்பட்டதாகும். பல தமிழரசர்கள் கோயில்களில் இசையுடன் பாட ஓதுவார்களை நியமித்தனர் என்று அறியக்கிடக்கின்றது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோர் பதிகங்களைப் பண்ணுடன் பாடியுள்ளனர்.

இசைக்கருவிகள் என்னும் போது பலவகையான இசைக் கருவிகள் இருந்தாலும் யாழிசைக்கு சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சுவாமி விபுலானந்தரின் யாழ் நூல் யாழ் பற்றிப் பல விபரங்களைக் கூறும். யாழ்பாடிப் பரிசு பெற்றதால் யாழ்ப்பாணம் உருவான கதையும் கேள்விப்பட்டிருப்போம். வீணை, கொக்கரை, கொடுமுழா பற்றிக் கல்லாடம் கூறும். குழல் செய்வதைப் பற்றிப் பெரியபுராணம் கூறும். தமிழரின் மங்கல இசையான நாதஸ்வர இசையின்றி எந்த மங்கல நிகழ்ச்சியும் தொடங்குவதில்லை என்ற மரபும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தமிழர் நாட்டுப்புறவியல் அல்லது தமிழர் நாட்டாரியல் என்பது பெரும்பாலும் வாய்மொழியாக வழங்கி வந்த பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள் ஆகியனவாகும். இவை கிராமத்து மக்களின் வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிக்கின்றது எனலாம். தாலாட்டுப்பாடல், நடனப்பாடல், கும்மிப்பாடல், வாழ்த்துப் பாடல் போன்ற பலவகைப் பாடல்களும் நாட்டார் இலக்கியத்துள் அடங்குகின்றன. கோவில்கள் கிராமிய கலாசாரத்தின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது எனலாம். கோவில்கள் கிராம மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தி வந்திருக்கின்றன. காலாகாலமாகப் பக்திக் கலாசாரம் மட்டும் இல்லையென்றால் கிராமியக்கலைகள் என்றோ அழிந்திருக்கும் என்பது பலரின் கருத்தாகும்.

“கொம்பூதிக் கொட்டடிச்சு குனிஞ்சு கும்மியடிப்போம்
கொல்லை போட்டுப்பாட்டுப்பாடி ஒயிலாட்டாம் நடிப்போம்
நம்மூரு அய்யனாருக்கு அர்ச்சனை பண்ணிப்போவோம்
எல்லாப் பேரும் நல்லாருக்க ஏகவிரதம் இருப்போம்”
என்ற பாடல் ஒரு உதாரணமாக விளங்குகின்றது.

மிகப்பழைமையான ஆடற்கலை மனிதனின் மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்று கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் கோவிலில் ஆடப்பட்டு வந்த ஆடற்கலை பின்னாட்களில் நுட்பக்கூறுகள் நிறைந்த பரதக்கலையாகத் தோற்றம் கொண்டது. ஆடலைத் தொடக்ககாலத்தில் கூத்து என அழைத்தனர். கூத்தைத் தொழிலாகக் கொண்டவர் கூத்தர் என்று அழைக்கப்பட்டனர். சிலப்பதிகாலத் தில் மாதவி தன் அரங்கேற்றத்தில் 11 வகையான நடனம் ஆடினாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாதவி ஆடிய குடக் கூத்து இக்கால கரக ஆட்டத்தை ஒத்திருப்பதாகக் கூறுவர்.

அத்துடன் தொல்காப்பியம் சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் நாடகம் பற்றிய குறிப்புகள் உண்டு.
நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் (தொல் 53. அகம்)

நாடக அரங்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிலப்பதிகாரத்தில் ஒரு குறிப்புக் கூறும். அது நாடகம் பற்றி விரிவாக பல கோணங்களிலும் ஆராயப்பட்டன என்பதை அறியலாம். அத்துடன் பண்டைக்காலம் முதற்கொண்டே சிற்பக்கலை தமிழரால் வளர்த் தெடுக்கப்பட்டது. மண், மரம், கல், தந்தம் ஆகியவற்றால் சிற்பங்கள் செய்யப்பட்டன. தமிழர் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலையின் இலக்கணத்தை இக்கலையில் புகுத்தியது என்பது வை. கணபதி அவர்களின் கூற்றாகும். படைப்புச் சிற்பங்கள், முழு உருவச் சிற்பங்கள் ஆகிய இரு வகைகளில் சிற்பங்கள் செய்யப்பட்டன.

சங்ககாலத்தில் இருந்தே தமிழர்களிடையே ஓவியக்கலை வளர்ச்சி இருந்தது. பெரும்பாலும் சுவர் ஓவியங்களாகவே அவை காணப்படுகின்றன. காஞ்சி, தஞ்சைப் பெரியகோயில் சித்தன்ன வாசல், திருமலைபுரக் கோயில் ஆகியன ஓவியக்கலைக்குச் சிறப்புச் சான்றாக விளங்குகின்றன. 12ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்ட தஞ்சை பிரகதீஸ்வரர்கோவில் அந்தக்காலக் கட்டிடக்கலை எவ்வளவு சிறப்பாகவும், நுட்பமாகவும் அமைந்திருந்தது என்பதற் குச் சான்றாகத் திகழ்கின்றது. தமிழ் நாட்டில் காணப்படும் ஆலயங்களின் கட்டிட வரலாறும் சிறப்புமிக்கதாக விளங்குவதைக் காணலாம்.

தமிழர்கள் வீரவிளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார்கள். பழந்தமிழர்களிடையே காணப்பட்ட மஞ்சுவிரட்டு, கொல்லேறு தழுவுதல் ஆகியன தமிழர்கள் வீரத்தைப் பறைசாற்றுவதாக அமைந்து விளங்குகின்றன. வலிமை பொருந்திய காளை மாட்டை அடக்குவது ஜல்லிக்கட்டு என அழைப்பர். ஜல்லிக்கட்டில் வென்ற வீரர் அதை வளர்த்துவரும பெண்ணைத் திருமணம் செய்வதுவும் வழக்கமாக இருந்துள்ளது. இந்த ஜல்லிக்கட்டு தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. மற்றும் சிலம்பம், வர்மக்கலை, மல்லாடல் போன்றன இன்றும் பாதுகாக்கப்பட்டுவரும் தமிழரின் தற்காப்புக் கலைகள் ஆகும்.

பழந்தமிழர் வாழ்வியல், மருத்துவம், நீர் மேலாண்மை, ஆட்சித்திறன், போரியல் போன்ற பல மரபுசார் விடயங்களை ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் கலைநயத்துடன் உருவாக்கி மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, தமிழரின் பலவகையான சிறப்புகளையும், அறிவு நுட்பங்களையும், பண்பாட்டுக் கலைக் கூறுகளையும், தொழில்நுட்பத் திறன்களையும், இன்றைய தலை முறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

சிலம்பம் ஆசான் பத்மகுமார்

ஒரு பார்வை





ஆங்கிலலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழரின் பாரம்பரியக்கலைகளான சிலம்பம், வர்மம், வாள்வீச்சு என்பனவும் அவை சார்ந்த மருத்துவ முறைகயும் சுதேச வைத்திய முறைகளும் தடைசெய்யப்பட்டன. இதனால் தமிழர் வீரியத்தைத் திட்டமிட்டு இழக்கச் செய்துள்ளனர்.

இன்று தமிழர் தம்மைப் பழமையான வீரியத்துடன் வளர்த்தெடுப்பதற்குத் தமிழின் பாரம்பரிய பண்பாடு, தொழில் நுட்பக்கலைகள் முதலானவற்றை அவற்றின் வீரியத்துடன் கற்றல் மிகவும் அவசியம்.

புலம்பெயர்தேசங்களில் வாழும் மக்கள் தங்கள் பாரம்பரியக் கலைகளைப் பேணுவதில் ஆர்வம்கொண்டு அக்கலைகளை வளர்ப்பதில் காட்டும் அக்கறையானது போற்றப்பட வேண்டியதொன்றாகும். வளர்ந்துவரும் தொழில் நுட்பங்களுடன் கூடிய விதம் விதமான கலைகளுக்கு மத்தியில் பழந்தமிழரின் ஆதிக்கலைகளில் ஒன்றான சிலம்பம் என்னும் தற்காப்புக் கலையினைத் தனக்குப் பின்வரும் சந்ததியினரும் பயின்று பாதுகாத்து பலன் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஆசான் பத்மகுமார் ஆவார். இவரது பணிகள் போற்றப்பட வேண்டியதாகும்.

ஆரம்பகாலத்தில் சிலம்பமானது, குருகுலமுறையில் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கற்பிக்கப்பட்ட கலை ஆகும். கனடா போன்ற புலம்பெயர்நாடுகளில் வாழும் மக்கள் அந்த நாட்டின் காலநிலை, வேலை நெருக்கடி, படிப்பு, குடும்பப் பொறுப்பு இவற்றின் மத்தியிலும் இக்கலையைக் கற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

இதற்குக் காரணம், பாரம்பரியக்கலையை அழியவிடாமல் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கமும் இக்கலை மீதுள்ள ஈடுபாடும்தான் என்கிறார் ஆசான்.

அத்துடன் இப்பாரம்பரியக் கலைக்குக் கிடைக்கின்ற வருமானம் ஏனைய கலைகளுக்கு கிடைக்கும் வருமானத்தை விட மிகவும் குறைவானதுதான் என்றாலும் ஆசிரியர் இக்கலை ஆர்வத்தினால் கற்கவரும் மாணவர்களுக்கு மிகவும் ஊக்கத்துடன் கற்பித்து வருகின்றார். காரணம் இக்கலையை எப்படியாவது மக்களிடையே கொண்டுசெல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்தான்.

ஆசான் பத்மகுமார் இக்கலையில் ஆர்வம் கொண்டிருப்பதற்கு காரணம் அவரது தந்தையார் மாமா மாமி தங்கை பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இக்கலை மீது கொண்ட ஆர்வமும் புரிந்துணர்வும்தான்.

1965 ஆம் ஆண்டு பிறந்தவரான பத்மகுமார் ஆரம்பத்தில் தந்தையின் விருப்பத்திற்காகவே கம்பு விளையாட்டைப் பழகினார். இவரது குருவான இலங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சோதிசிவன் நடராஜா என்பவரிடம் முறைப்படி கற்று 1983 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அரங்கேற்றம் செய்தார். தொடர்ந்தும் இக்கலையைக் கற்க ஆர்வம் கொண்ட குருவிடம் முறையாகப் பயின்றபின் உடலளவில் மனதளவிலும் பெரும் அபிவிருத்தி ஏற்பட் உணர்ந்து மேலும் சிலம்பக்கலையை ஆரம்பித்தார். இக்கலையை வளர்ப்பதற்கு அவ தந்தையாரே பெரும் வழிகாட்டியாக

அதன் பின் உறவினர்கள் மூலம் சிலம்பக்கலையில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டார். இந்தியாவிற்கு சென்று மதுரை, சேலம், திருச்சி, சென் போன்ற இடங்களில் இக்கலை நுட்பங்களைப் பயின் தோடு அங்கு கற்பிக்கவும் செய்தார். தமது கற்பித்தற் காலத்தில் ஆயிரத்திற்கு மேற்படடவர்களுக்குச் சிலம்பப் பயிற்சி அளித்த காலத்தையே தமது வாழ் ஆத்ம திருப்தி அளித்த காலமாகக் கூறுகிறா

1996 இல் இலங்கை தமிழ் பேராசிரியர் கனடாவுக்கு வந்திருந்த பொழுது அவர் கொண்ட நிகழ்வு ஒன்றில் ஆசான் பத்மகுமார் ளின் சிலம்பம் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அவருக்குக் கனடா தமிழ்மக்கள் மத்தியில் ஆதரவும் அபிமானமும் கிடைத்தது. அந்த ஆதரவின் எழுச்சியானது சிலம்பத்தை எப்படியாவது மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தியது. கனடாவில் கடந்த பத்து வருடங்களாகச் சிலம்பக்கலையைக் கற்பித்து வருகின்றார். இவரிடம் நூற்றிக்கும் மேற்பட்ட மாணவர்கள் சிலம்பம் கற்று வருகிறார்கள்.

ஆசிரியர் சிலம்பத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது அதில் உள்ள பல பிரிவுகளையும் வீச்சு முறைகளையும் பற்றிக் குறிப்பிடுகிறார். அலங்கார வீச்சு, இரட்டைக் கைவீச்சு, ஒற்றைக்கை வீச்சு, பந்த வீச்சு, மறுக்காணம், துணுக்காணம், கர்நாடக வரிசை, குறவஞ்சி, பனை ஏறி மல்லன், சிறுத்தாக்களி, வர்மக்குச்சி, மடு, சுருள்வாள் போன்ற பிரிவுகளும் பாணிகளும் இருந்தபோதும் இவற்றை நேரடியாகச் செய்து காட்டினாலேயே விளங்க முடியும் என்கிறார். இவற்றை மாணவர்கள் முழுமையாகக் கற்கவில்லையே என்ற ஆதங்கம் ஆசிரியரிடம் இருந்து வருகிறது.

கோயில்களிலும், திருமண வீடுகளிலும் சிலம்ப



நிகழ்ச்சிகள் இடம்பெற்று வந்ததாகவும் குறிப்பிடுகிறார். யுத்தத்திற்கு முன்பு இலங்கையில் ஆசிரியர் பழகிய காலங்களில் கற்பிக்கும் இடங்களில் ஒரு வித கண்காணிப்பு இருந்து கொண்டே இருந்தது. இதனால் பயந்து கொண்டே சிலம்பம் கற்பித்தனர்.

ஆசான் பத்மகுமார் ஆண்களுக்கு மட்டுமல்லாது, பெண்களுக்கும் இக்கலையைக் கற்பித்து வருகிறார். இவர் மாணவ மாணவிகள் சகிதம் கனடாவில் உள்ள ஆலயங்களான மொன்றியல் முருகன் கோயில், செல்வச் சன்னதி கோயில், ரிச்மண்ட் பிள்ளையார் கோயில்களில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். கடந்த 19 வருடங்களாக மொன்றியல் திருமுருகன் கோயிலில் உறியத்த திருவிழாவை நடத்திவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலம்பத்தின் சிறப்பு பற்றி ஆசான் பத்மகுமார் குறிப்பிடும் பொழுது இது ஒரு உடற்பயிற்சி மாத்திரமல்ல, உள ஆரோக்கியதிற்கும் உரிய சிறந்த கலையாகும். ஞாபக சத்தியைத் தூண்டுவதற்கும், மனதை ஒருநிலைப்படுத்தவும், உடலைச் சுறுசுறுப்பாக இயங்கவும் வைக்கிறது என்கிறார். அத்துடன் நுரையீரல் தொடர்பு பட்ட பிரச்சனைகள், மூட்டு வலி, இடுப்பு வலி, கொலஸ்ரோல், உடற்பருமனையும் குறைக்கின்றது என்கிறார்.


வீர விளையாட்டான சிலம்பக் கலை, மனித உடலின் நோய் காரணிகளை அழிக்கவல்லது என ஆய்வுகள் குறிப்பிடப்பிடுகின்றன. சிலம்பக்கலை பழகுவதால் மனித உடலின் வாதம், பித்தம், கபம் சமச்சீர் ஆக்கப்படும். உடலில் வாதம் பித்தம் கபம் ஆகியவை சீர்படுவதால் உடற்கழிவுகள் வெளியேறப்படும், உடற் தசைகள் வலுப்பெறும், மூளை செயல் திறன் அதிகரிக்கும் என்ற குறிப்புகளின் மூலம் சிலம்பக்கலையின் சிறப்பை அறியலாம்!

ஆசான் சிலம்பக்கலை மட்டுமல்லாது, காராத்தே, ஜூடோ, மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற கலைகளையும் கற்பிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார். ஆனாலும் பாரம்பரிய சிலம்பக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுவருகிறார்.

புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையோர் கனடாவில் அரசியல் பலத்துடனும் மிகுந்த பொருளாதாரப்பலத்துடனும் இருந்தாலும் அவர்கள் தமது கலை கலாச்சார நிகழ்ச்சிகளை சீனக் கலாச்சாரமையத்திலோ, ஆர்மீனியக் கலாச்சார மையத்திலோ நடத்த வேண்டியிருப்பது வேதனை அளிக்கின்றது என்று ஆசிரியர் கூறுவது எமக்கு வருத்தமாக உள்ளது.

தமிழர் கலைகள் காப்போம் ! தமிழர் மரபுகளை மீட்ப்போம் !

திருமந்திரத்தில் பிராணயாமம்



திருமதி பாதுசா ஆனந்தராஜா

முன்னுரை:

தமிழர் நிறைவான வாழ்வுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திருமந்திரத்தில் திருமூலர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளை விளக்கியுள்ளார். அதில் யோகத்திற்கு சிறப்பிடம் கொடுத்துள்ளார். யோகத்தில் பிராணயாமம் பற்றிய சிறு விளக்கமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாசப்பிணைப்பாகிய இன்ப துன்ப வாழ்க்கையில் உள்ள எமக்குச் சமய சஞ்சீவியாக திருமந்திரம் உதவுகிறது. அதில் கூறப்பட்ட கருத்துகளாவன, உடலுக்கு ஊட்டம் அழிப்பது, உடம்பு உயிருக்காக ஏற்பட்டது, உயிர் போனால் உடலானது பூமியில் கலந்து விடுகிறது என்பனவாகும். எனவேதான் உயிரைப்பற்றியும் உடலைப் பற்றியும் அறிந்திருப்பது மிக அவசியமானது.

'உடல் உயிர் உண்மை ஓர்ந்து உணராதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே" என்கிறது திருமந்திரம்.

ஓம் என்னும் தத்துவம்:

அகார, இகார, உகார, ஓங்கார, மகார என்னும் ஐந்து எழுத்துக்களையும் நந்தியின் சீடர்களாகிய பதஞ்சலி தமது யோக சூத்திரத்திலும் திருமூலர் தமது திருமந்திரத்திலும் கூறி இருக்கிறார்கள். எல்லாத் தத்துவ ஞானிகளும் 'ஓம்' என்ற முப்பதத்தில் ஓடும் பிராண வாயுவை பற்றி நின்றே வீடு பெற்றார்கள்.

"தன்னை அறிவது அறிவாகும் அஃதன்றி
பின்னை அறிவது பேய் அறிவாகும்"- திருமந்திரம்

இக்கருத்தையே வேத நூல்களும் உபநிடதங்களும் திருமந்திரமும் இன்னும் பல தத்துவ நூல்களும் பகவத் கீதையும் கூறுகின்றன. 'ஓம்' என்னும் உச்சரிப்பின் வழியே எம் மனதைப் பதித்து அவ்வழியே செல்வதே பிராணயாமம் ஆகும்.

"ஐவருக்கு நாயகன் அவ்வூர் தலைமகன் உய்யக்
கொண்டு ஏறும் குதிரை மற்றொன்று உண்டு"
- திருமந்திரம்

என்னும் பாடல் வரிகள் மூலம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் ஆட்டுவிப்பது மூச்சுக்காற்று அதாவது பிராணவாயு என்றும் இதனை நாம் கட்டுப்படுத்துவதன் மூலம் மனம் அலைபாயாது ஒருமுகப்படும் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

குரு அருள்:

"கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப்பிடிக்க வசப்படும் தானே"-

நுண்ணறிவுள்ள ஆசான் துணைகொண்டு அவர் கற்பித்த முறைப்படி மூச்சுப் பயிற்சியை முயற்சி செய்தால் அதனை வசப்படுத்த முடியும் என்கிறார் திருமூலர்.

அத்துடன்,
"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்"
என்னும் பாடல் மூலம் பிராணவாயுவை ... வசப்படுத்தி விட்டால் மகிழ்ச்சியைக் கொடுக்கும் ... டன் துள்ளித் திரியும் உற்சாகத்தைக் கொடுக்கு... சோம்பலைப் போக்கும் என்றும் உள்ள படி இ... சொல்லி இருப்பதாகவும் புரிந்து கொள்ளக் கூடியவ... புரிந்து கொள்ளட்டும் என்றும் கூறியுள்ள...

"பிராணன் மனத்தொடும் பேராது ... வரிகள் வாயிலாக, பிராணனும் ... அடங்கி பிராணன் இருந்தால் பிறப்பு ... எனவும் குறிப்பிட்டு உள்ளார்.

மூச்சுப்பயிற்சியின் நிலைக...

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நா...
ஊறுதல் முப்பத் திரண்டதில் ...
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக...

இதில் திருமூலர் மாத்திரை ... குறிப்பிட்டுள்ளார். அவற்றில் முக்கிய ... குறிப்பிடலாம். அதாவது மூச்சை உ... பூரகம் எனப்படும். இழுத்த மூச்சை நிறுத்... கும்பகம் எனப்படும். பின்பு மூச்சை ... இரேசகம் எனப்படும். அத்துடன் இடப்பக்க ... ரத்தை இடகலை எனவும், வலப்பக்கத்தை பிங்கலை எனவும் குறிப்பிட்டுள்ளார். இவற்றை இரண்டு கண்... ளாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று குறிப்பி... உள்ளார்.

"வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்"

அதாவது இடப்பக்க மூக்கின் வழியாக மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து வசப்படுத்தி அடக்க முடிந்தால் உடல் பளிங்கு போல ஒளி வீசித் திகழும் என்றும் முதுமை உற்றாலும் இளமை மாறாதிருக்கும் என்றும் குருவின் துணையுடன் இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளார்.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார் இல்லை"
- திருமந்திரம்

என்னும் பாடல் மூலம் இடப்பக்கம் வழியாக மூச்சை

உள் இழுத்து, வலப்பக்கம் வழியாக வெளிவிட்டு இரு- பக்கமும் உள்ளே மூச்சுக்காற்றை நிறுத்தி ஆசனம் செய்தாலும் மூச்சுக்காற்றை உள்ளே நிறுத்தும் கணக்கு தெரிந்தால் தான் எமனையும் வெற்றி பெறலாமென்கிறார்.

"இட்டது அவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப் படதச நாடியும் பூரித்து"

தரப்பட்டுள்ள வீடாகிய இந்த உடம்பு தளர்ந்து போகாதிருக்க பிராணனும் அபாணனும் நேர்நிலையில் (சமநிலையில்) இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் மூலம் வலியுறுத்தி உள்ளார்.

"புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மலம் ஆக்கில்"

வெளிவந்து உட்புகுந்து உடல் முழுவதும் பரவி நிற்கின்ற மூச்சுக்காற்றை முறையாக உடலுக்குள் நிறுத்தித் தூய்மை அடையச் செய்வதன் மூலம் உடல் உறுப்புகள் புத்துணர்வு பெற்றுச் சிவக்கும் என்பதோடு, தலைமுடியும் கறுக்குமென்கின்றார்.

முடிவுரை:

இவ்வாறாகத் திருமூலரின் திருமந்திரத்தில் கூறப்பட்ட மூச்சுப் பயிற்சியில் (பிராணயாமம்) சிலவற்றைப் பற்றி குறிப்பிட்டுள்ளோம். அத்துடன் அவர்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என்னும் மெய்யான, மேலான பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதுதான் திருமந்திரத்தின் சிறப்பு அம்சம் ஆகும். மூச்சுப்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் சித்தத்தின் உள்ளே சிவனைக் காணலாம் எனக் கூறியும் அறிவை முன்னிலைப்படுத்தியும் திருமந்திரத்தை ஆக்கியுள்ளார்.

இனிய தமிழில் உள்ள திருமந்திரத்தையும் அதில் கூறப்பட்ட யோக தத்துவத்தையும் முக்கியமாக பிராணவாயுவின் செயற்பாடுகளையும் நன்கு கற்போமாயின் நாம் அறிவுபூர்வமாக உடம்பின் செயற்பாடுகளை உணர்ந்து அதைப் பேணி, ஆன்ம ஈடேற்றம் பெற முடியும்.

முனைவர். ம. இராசேந்திரன்
முன்னாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
பதிப்பாளர் - கணையாழி

+91 944 326 9689
kanaiyazhi2011@gmail.com

கணையாழி



உலகத் தமிழர்களின் கொண்டாட்டம்

தைப் பிறந்தால் வழிபிறக்கும்!
இதோ தை மாதம்!
கதிரவன் நடக்க இயற்கை வழி திறக்கிறது.
வெப்ப நாடுகளில் குளிர் குறைந்து பொதுவெளிகளில் கொண்டாட்டம் நடத்த மக்களுக்கும் வழி கிடைக்கிறது.
பனிமிகுந்த குளிர் நாடுகளில் பழகிய வழிகள் பனிப்போர்வைக்குள் பதுங்கிக் கொள்ள வாழ்வதற்குப் புதிய வழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள்!
அப்படியென்றால் தை மாதம் பிறந்தால் எல்லோருக்கும் புதிய வழி பிறக்கிறது.

உலகில் தமிழர்கள் எங்கே வாழ்ந்தாலும் வழி பிறக்க வேண்டும் பிறக்கிறது.
தைப் பிறந்தால் புத்தாண்டுப் பிறக்கிறது. தமிழ்ப் புத்தாண்டுப் பிறக்கிறது.
இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் தைப் பொங்கல் விழாக் கொண்டாட்டத்தோடு தமிழ்ப் புத்தாண்டுப் பிறக்கிறது. சூரியனைக் கொண்டாடியபடி பிறக்கிறது.


சூரிய நெருப்பை இப்போதும் பூமி அடிமடியில் அடைகாக்கிறது.
சூரிய நெருப்பின் சூடு, உயிரின் அடையாளம்.
சூடு இல்லையேல் உணர்வு இல்லை.
இப்போதும் நம் உடம்பில் சூரியனின் சூடு இருக்கிறது. அதனால் சுரணை இருக்கிறது.
உயிர் வாழ, இயற்கை சுற்றுச் சூழல் காக்கப்பட எப்போதும் சூரியன் தேவைப்படுகிறது
கதிரவனின் உதவிக்கு நன்றி பாராட்டும் வகையில் உலகுக்கு உணர்த்தும் வகையில் தைப் பொங்கலையும் தமிழ் மரபுத் திங்களையும் கொண்டாடுகிறது கனடா.

இந்தக் கொண்டாட்டம் உலகத் தமிழர்களின் கொண்டாட்டமாக மாற,
கனடியத் தமிழர்கள் இதோ முன்னத்தி ஏர் பிடித்திருக்கிறார்கள்..
கனடா தமிழர்களுக்கும்
கனடா நாட்டுக்கும்
நன்றியையும் பாராட்டையும் வாழ்த்தையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
ம. இராசேந்திரன்



தமிழர் மரபுரிமை உலகறியச் சொல்வோம்



பொன்னையா விவேகானந்தன்

தமிழர் மரபுரித் திங்கள் என்ற அங்கீகாரதிதின் பின்னர் பிறவினத்தோர் பலர் தமிழர் மரபுரிமை பற்றி அறிய ஆர்வம் காட்டி வருகின்றனர். பாடசாலை, பல்கலைக்கழகங்களிலும் பணியிடங்களிலும் தாம் சந்திக்கும் தமிழரிடம் தமிழர் மரபு பற்றிப் பிறவினத்தோர் கேட்கத் தொடங்கிவிட்டனர். அவ்வேளை அவர்களுக்கு தமிழர் மரபுரிமை குறித்து எதைச் சொல்ல வேண்டும் என்பது பலருக்கும் பொதுவாக சிக்கலாலக இருக்கின்றது. கீழே தரப்படுகின்ற 'தமிழர் மரபியல்' என்ற விளக்கம் மிகச் சுருக்கமான தமிழர் வரலாறு பண்பாடு, மரபியில் சார்ந்த புரிதலைத் தர முயன்றிருக்கின்றது. இதனை நன்கு வாசித்தோ அல்லது படியெடுத்தோ நீங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பிறருக்குக் கூறுங்கள்.

தமிழர் மரபியல் - Tamil Heritage

உலகில் தற்போது பேசப்படுகின்ற மொழிகளில் மிகப் பழைய மொழியாகத் தமிழ் கருதப்படுகின்றது. உலகெங்கும் ஏறக்குறைய 100 மில்லியன் மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். தமிழருடைய பூர்வீகத் தாயகங்கள், இந்தியாவின் தென் மாநிலமான தமிழகமும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுமாகும். இந்தத் தாயகங்களிலிருந்து புலம் பெயர்ந்தோர் உலகெங்கும் ஏறக்குறைய ஐம்பதற்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர் மொழி வழிப்பட்ட இனமாவர். இவர்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தும் பல நாடுகளில் நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். இவ்வனத்தோர் அனைவரும் தமிழ்மொழி பேசுவோர் என்ற உறவிலேயே ஓரினமான இணைந்துள்ளனர்.

பன்னெடுங்காலத்துக்கு முன்பே இந்தியத் துணைக் கண்டத்திலும் இந்தியாவுக்குத் தெற்கே கடல் கொண்ட குமரிக்கண்டத்திலும் வாழ்ந்த பழம்பெரும் இனம் தமிழர் எனக் கருதப்படுகின்றது. இவை பற்றிய ஆய்வுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

5000 ஆண்டுகளுக்கு முன் பெருவளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகின்ற சிந்துவெளி நாகரிகக் கண்டுபிடிப்புகளை ஆய்வு செய்தோர் அங்கு வாழ்ந்தோர் பெரிதும் தமிழர் பண்பாட்டை ஒத்துள்ளனர் எனக் குறிப்பிடுகின்றனர்.

தற்போது பயன்பாட்டில் இருக்கும் தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கணநூல் 3000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதாகும். மொழியின் பகுப்புகளான எழுத்து, சொல் என்ற இரண்டுக்கும் இலக்கணம் எழுதிய இந்த நூல் தமிழருடைய வாழ்வியலுக்கும் இலக்கணம் எழுதி வைத்துள்ளது. மக்களுடைய வாழ்வை அகம், புறம் என இரண்டாகவும் வாழ்நிலங்களில் அடிப்படையிலும் வாழ்க்கைக்கான இலக்கணங்களை வகுத்துள்ளது. உலகில் வாழ்வுக்கு இலக்கணம் எழுதிய ஒரேயொரு நூல் இதுவே. பண்டைத் தமிழருடைய பண்பாட்டு மரபுகளையும் விழுமியங்களையும் அழகுற எடுத்துரைக்குப் பண்பாட்டுக் களஞ்சியமாக இந்த நூல் திகழ்கின்றது

தமிழில் எழுதப்பட்ட மற்றுமொரு நீதி நூ[illegible] குறளாகும். இது கிறிஸ்த்துவுக்குப் பின் 2ம் [illegible] டில் திருவள்ளுவர் என்பவரால் எழுதப்பட்டது [illegible] மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து [illegible] காக மனிதரால் ஆக்கப்பட்ட ஒப்பற்ற [illegible] வாகும். தனிமனித ஒழுக்கம், வாழ்வு [illegible] வினைத்திறன், பண்பாடு மிக்க அக[illegible] வற்றைத் தமிழர் மரபொழுக்க வழி நி[illegible] கின்றது இந்த நூல்.

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற் [illegible] சென்ற கிறிஸ்தவப் பாதிரியார்களா[illegible] (இத்தாலி), ஜி. யு. போப் (பிரித் [illegible] கார்டுவெல (அயர்லாந்து) போன்றே[illegible] கற்றுத் தேர்ந்து அதைப் போற்றியுள்ள[illegible]

தமிழ் இனத்தவருடைய தொ[illegible] யலை நூற்றுக்கணக்கான தமிழ் இல[illegible] செய்துள்ளன. ஒவ்வொரு தலைமு[illegible] ச்சியான வாழ்வியல் வழியாகவும் [illegible] வாயிலாககவும் பண்பாட்டு விழுமியங்க[illegible] களையும் கற்றுணர்ந்து போற்றி வருகின்[illegible]

தமிழர் சிறந்த கலைமரபுகளைக் கொ[illegible] இசை, ஆடல், ஓவியம், சிற்பம், கட்ட[illegible] தனித்துவமான பல கலைமரபுகளைப் பேணி[illegible] றனர். இந்தியாவின் புகழ்பெற்ற இசைமரபான க[illegible] இசை தமிழிசை மரபுகளை அடிப்படையாகக் [illegible] தாகும். உலகலாவிய வகையில் புகழ் பெற்றிருக்கும் பரத நாட்டியம் தமிழர்களின் சிறந்த ஆடற்கலையாகு[illegible] தமிழரின் சிறந்த கட்டடக்கலைக்குத் தஞ்சைப் பெரிய கோவிலும், மாமல்லபுர சிற்பக் கோவில்களும் சான்றாக உள்ளன.

பண்டைக்காலம் தொட்டு தமிழர் நிலம் மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. 1700களின் பின்னர் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டுத் தமிழர் தமது தன்னாட்சியை இழந்தனர். அதன்பின் இன்றுவரை தமிழர்கள் தன்னாட்சி கொண்ட அரசொன்றை நிறுவ முடியாதிருப்பது வேதனைக்குரியதே.

9ம் நூற்றாண்டில் கிழக்காசியாவின் பெரும்பகுதியை ஆண்டவர்கள் தமிழராவர். வலிமையான கடற்படையும் போரில் சிறந்த வீரர்களும் கொண்டிருந்த தமிழரசு இந்து சமுத்திரத்தைப் 13ம் நூற்றாண்டுவரை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

விவசாயத் தொழிலில் சிறந்தவர்களான தமிழர் மழைநீரைத் தேக்கியும் ஆற்றுநீரை வழிமறித்தும் வயல்களுக்குப் பாசனம் செய்து உலகிற்கு புதிய நீர்ப்பாசன முறையை அறிமுகப்படுத்தியவர்களாவர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்றுவந்த இனவழிப்பிலும் உள்நாட்டுப் போரிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தமிழர், தாய்நாடு விட்டகன்று பிறநாடுகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியோர் தாம் வாழும் நாடுகளின் சட்ட ஒழுங்களை மதித்து அந்நாட்டின் வளர்ச்சியில் பங்குகொள்வதோடு, தமது பண்பாட்டு மரபுகளையும் பேணி வருகின்றனர்.

இந்தவகையிலேயே கனடா அரசு தமிழருடைய பண்பாட்டு மரபுரிமைக்கு மதிப்பளித்துத் தைமாதத்தைத் தமிழரின் மரபுரிமை மாதமாக அங்கீகரித்துள்ளது.

பலவழிகளிலும் தமிழர் வாழ்வில் சிறப்புப் பெற்றிருக்கும் மாதம் தையாகும். தாயகங்களில் விவசாயத்தின் பயன்கள் வீடு வந்து சேரும் காலம் தையாகும். தமது வாழ்வுக்கு உதவுகின்ற கதிரவன், மாடு போன்றவற்றுக்கு நன்றி கூறுகின்ற தைப்பொங்கல் என்ற விழாவும் தை மாதத்திலேயே நடைபெறுகின்றது. பண்டைத் தமிழர் தமது புத்தாண்டையும் தைமாத்திலேயே கொண்டாடியுள்ளனர். எனவேதான் தமிழர் தமது மரபுரிமைகளைப் போற்றுவதற்குரிய மாதமாகத் தையைத் தமிழர் தேர்ந்தெடுத்தனர்.

தைமாத்தில் கனடாவாழ் தமிழர் பல்வேறு மரபுரிமை நிகழ்வுகளை நடத்தி, இனஞ்சார் பெறுமானங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

Tamil Heritage

Of the hundreds of languages spoken around the world, the Dravidian dialect of Tamil stands as the world's eldest language. The ancient language originates from India's southern province of Tamil Nadu and the tropical island of Sri Lanka, located south of India. Approximately 100 million people around the world speak Tamil - with the Tamil Diaspora concentrated in more than 50 foreign countries.

Unlike the many cultures that are centred around religion, the Tamil culture is one that is influenced by the language itself. Despite following various religious paths, Tamils stand as a united and distinct nation, because of their ability to preserve ties through their mother tongue.

Evidence has shown that from the birth of [hu]man, Tamils inhabited what was referred to as "Kumari Kandam," (a lost continent to the Indian Ocean, composed of a joint present-day India and Sri Lanka) before the dismantlement of Pangea during the Paleozoic and early Mesozoic eras.

To further support this theory, archeologists have also drawn close cultural links between the inhabitants of the ancient Indus Valley civilization and cultural values practiced by the Tamil people for generations.

The Tamil language stands as the world's eldest dialect, not merely by chance, but by its strategic ability to evolve with time. Like its invaluable culture, the Dravidian language is well known for its contribution to literature. Of the many unique compositions that have come from within the language, "Tholkaapiyam," is without a doubt one of the most ingenious Tamil epics.

Although considered a treasure for its richness and guidance in the grammatical aspects of the language. The 3000-year-old epic has been written in a manner in which it may also be applied to the lifestyle and culture of its followers. Similar to how the saga divides the grammatical parts of the language into "Ezhuthu" (letters) and "Sol" (words). The chronicle also divides life into "Aham" (personal life) and "Puram" (social life). "Tholkaapiyam," stands an epic that not only depicts the literary greatness of the ancient language, but also its aestheticism.

In a like manner, "Thirukkural" is another master piece to have come from the Tamil language. Written by "Thiruvalluvar" in the second century, the tome has been praised for its ability to withstand the test of time, defying influences such as language, religion and status. It seeks to ensure that an individual lives his or her life in the most righteous way, by instilling values from the Tamil culture within themselves.

The thousands of literature pieces that can be found within the ancient Dravidian language, portray the morals and values which have been passed down by the Tamil society for generations.

Having said that, the ancient language also depicts its rich culture through its various art forms. Dance, music, painting and sculpting are just a few of the many art forms that can be found within the Dravidian culture. The ancient and well known dance form of Bharatha natyam originates from Tamil culture. Even Indian classical Carnatic music takes its roots from ancient Tamil art forms. The rich architecture of temples in India, like the Thanjai Perung Kovil and Mamallapuram are also proof of the sophistication encompassed within the Tamil language.

Tamils were also great cultivators. They were able to reuse sources such as rain water and build cross sectional structures to enhance the yields of their crops with very minimal mechanisms. Tamils also invented river canal irrigation which is now used by thousands of farmers around the world.

During the ancient times, the Dravidian nation was led under the rule of the "Mooventhargal," which roughly translates to the "three kings or kingdoms." They were famously known as the "Chera Arasu (kingdom)," "Chola Arasu (kingdom)" and the "Pandiya Arasu (kingdom)." But with colonial rule that came with the 17th century, the Tamil nation lost its privilege as an independent populace and state. Since then, it has yet to regain sovereignty.

But the rule of Tamil kings was nothing short of epic. In the 9th century, the Tamil kingdom had expanded to capture almost all of East Asia. With a strong navy and even more robust army, the Tamil Kingdom held its reign over East Asia until the 13th century.

As a result of the civil war that occurred in Sri Lanka and the genocide against Tamils, many have fled their homeland to protect themselves and their families. Despite living abroad, the Tamil Diaspora continues to indulge in its culture and resumes to pass on its culture to its next generation.

Because of such efforts and its ancient setting, the Canadian government has officially recognized the month of January as Tamil Heritage Month. During this month, Tamils around Canada conduct several events to showcase their culture to their fellow Canadians.

2017 Award Recipient

Master (Aasaan) V.Pathmakumar

Founder of Aathi Silambam Martial Arts Academy

Tamil martial arts, one of the most ancient form of fighting techniques, is rich in the science of combat involving hand-to-hand (Kuttu-Varisai), footwork (Kaal-adimaanam), and weapons. Various aspects of this five thousand year old art have been handed down as part of family tradition. Aasaan Pathmakumar is from one such family tradition which trained in locks (Pootu-Pirivu), pressure-points (Marmam-Adi), and weapons such as bamboo staff (Silambam) and Deer antlers (Maduvu). At an early age of thirteen his training was initiated by his father, paternal aunt and uncle on the proud soil of Sri Lanka. Dedication, love and inclination towards the traditional martial arts allowed him to quickly master the fundamental skills and readied him for advanced training.

Under the guidance of Grand Master Sothi Sivam Nataraja, Aasaan Pathmakumar undertook rigorous training and pursued specialization of five major styles namely Markanam, Thuluk Kanam, Paniyeri Mallan, Karnatakan, and Kuravanji. Earning the faith of Grand Master Sothi Sivam Nataraja and proving his prowess on the various styles and weapons such as silambam, dagger (Kathi), sword (Vaal), maduvu, and flexibile-sword (Surul Vaal), Aasaan Pathmakumar was asked by his teacher to take the unbreakable vow to uphold honour of this powerful art before being revealed to the closely guarded secrets of Tamil martial arts.

Realizing the tremendous potential of this art to uplift the human psyche, Aasaan Pathmakumar was inspired to establish the Aathi Silambam Martial Arts Academy. Over the span of thirty-two years, he has dedicated himself to carry forward this ancient art and has trained approximately a thousand students. Transformation of his students in terms of improved strength, stamina, speed, sharpness, self-confidence, stoicism, and self-control motivates him to uphold and spread this art. Aasaan Pathmakumar's efforts have been contributory towards revival of the ancient Tamil martial arts and creating a cultural identity for the Canadian Tamil community.



நன்றி நவில்கிறோம்!
Thanking You!
Merci Beaucoup!







2016



















MARKHAM-2016














ஓவியர் மருதுவின் ஓவியப் பட்டறை









மார்க்கம் நிகழ்வுகள்

2016





DANCE





சிலம்பம் ஏற்பாட்டுக் குழு



யோகா ஏற்பாட்டுக்




SILAMPAM COMMITTEE-2016











YOGA



Contributing Fine Arts Schools



அபிநயக்ஷேத்ரா கனடா
Abhinayakshetra Fine Arts Canada


Contact: indofinearts@gmail.com / 647-261-1525
Teacher: திருமதி. கார்த்திகா பார்த்திபன் MFA / Smt. Karthiha Parthiban MFA





சிவசக்தி நுண் கலைக்கூடம்
Sivasakthy Fine Arts Academy

Contact: danceforall@gmail.com / (416)858-9593
ஸ்ரீமதி. கௌசல்யா ராஜ்குமார் / Mrs. Kawsalya Rajakumar,
ஸ்ரீமதி. சங்கீதா பூங்காவன் / Mrs. Sangeetha Punkavan and
ஸ்ரீமதி. நிரஞ்சனா நிமலன் / Mrs. Niranjana Nimalan



பரதாலயா
Bharathalaya Dance Academy

Contact: 416 839 4413 / 647 504 8198
செல்வி. நிவேதா ராமலிங்கம் / Ms. Nivedha Ramalingam



நாட்டிய கலாஷேத்திரா
Nattiya Kalakshetra Dance School of Fine arts

Contact: 905 554 5846; CELL 647 638 7004
ஸ்ரீமதி. தேனுஜா திருமாறன் / Smt. Thenujah Thirumaran



ஆதி சிலம்பம்
Aathi Silambam Martial Arts Academy

Contact: 416-556-6130
ஆசான் வி. பத்மன் / Aasan V. Pathman



கலை நாட்டியாலையா
Kalai Natiyalaiya fine Arts

Contact: 647-996-3292
ஸ்ரீமதி. கலைமதி வாகீசன் / Smt. Kalaimathy Vageesan

Contributing Fine Arts Schools

வேணுகாண மயக்கம்
Venugana Mayagam

Contact: venuganalayam@gmail.com

'வேணு காண வாருதி' டாக்டர். செல்வநாயகம் தயாபரன்

'Venu Kaana Vaaruthi' Dr. Thayaparan Selvanayagam



தென் ஆசிய இசைக் கலைக்கூடம்
South Asian Music Academy of Ontario

Contact: 647-339-4730

'இசை கலைமணி' ஸ்ரீமதி. குலநாயகி விவேகானந்தன்

'Isai Kalaimani' Smt. Kulanayaki Vivekananthan. B.A.Hons.



ஆரியா நடனப் பள்ளிக்கூடம்
Ariya Dance Academy

Contact: 647-292-6258

ஸ்ரீமதி. மலர்விழி வரதராஜா

Malarvilly Varatharaja, Hon. BSc, MA



நாட்டிய சமர்பனா கலைக்கூடம்
Naatiya samarpanaa kalaikoodam

Contact: 416-892-6788

ஸ்ரீமதி. ரஜனி மதிவர்ணன் / Mrs. Rajani Mathivarnan, M.F.A



சிலம்பொலி க்ஷேத்திரம் நடனப்பள்ளி
Silamboli Kshetram Dance Company

Contact: skdancecompany@gmail.com

ஸ்ரீமதி. சாந்தி ரூபன் / Mrs. Shanthi Ruban



கலைக்கோவில் நுண்கலைக்கல்லூரி
Kalaikovil Academy of Fine Arts

Contact: (416) 292 2425 Cell: (416) 803 2425


'நட்டுவாங்க கலைமாணி' 'நட்டியக்கலா குலநிதி'

ஸ்ரீமதி. வனிதா குகேந்திரன்

'Naatiyakalaa Kulanithi' Smt. Vanitha Kugenthiran




அகரம்
FREE
DOWNLOAD
AGARAM
TAMIL TEACHER
சூரியன்
சொற்கள்
Download on the
App Store
GET IT ON
Google Play
www.agaramapps.com







PROUD TO BE A
MARKHAM
BASED DEVELOPER

